பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

துரையப்பா கொலைவழக்கு:

# ட்ரயல் அட்பாரின் அதிகாரம்: சுப்ரீம்கோர்ட் திங்கள் கூடும்

கொழும்பு, வெள்ளி
துரையப்பா கொலைவழக்கை விசாரணைசெய்ய ட்ரயல்அட்பார் நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்று முன்னர் தாக்கல்செய்யப்பட்டிருந்த மனுமீதான தீர்ப்பை வழங்குவதற்காக உயர்நீதிமன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை கூடுகிறது.

ஏற்கனவே தாக்கல்செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணை முடிவுற்று தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டிருந்த வேளையில் கடந்த 12ம் திகதி ட்ரயல்அட்பார் நீதிமன்றத்திலுல் துரையப்பா கொலைவழக்கின் சந்தேகநபர்கள் 7 பேரும் விடுதலைசெய்யப்பட்டு மீண்டும் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே.

ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தின் அதிகாரம் குறித்த தீர்ப்பு அவசியமா இல்லையா என்பது பற்றிய இருதரப்பின ரதும் கருத்துக்கள் திங்கட்கிழமை ஆராயப்படும். [இ]


# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 8 ஜ: ஆகிர்: 2 இதழ்: 99
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21-5-77


# காங்கேசனில் பொலிஸ் அட்டகாசம்பற்றி புகார்!

## 6 ஸ்ரீகாருடன் மறைந்தார்

கொழும்பு, வெள்ளி
கொம்பனித்தெருவைச் சேர்ந்த சொய்சா என்பவர் வீட்டிலிருந்து கடந்த ஆறு தினங்களுக்குமுன் தமது 6 ஸ்ரீ காரில் புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என்று பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

காணுமல் போனவர் மனநோயால் பீடிக்கப்பட்டவர் என பொலிசாரிட தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# முன்னுள் எம். பீ. யும் மாஜி பட்டினசபைதலைவரும்தந்தி

யாழ்ப்பாணம், சனி

**காங்கேசன்துறை, மயிலிட்டி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை ஆகிய இடங்களில் பொலிசாரினல் பொதுமக்கள் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர். உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.**

இவ்வாறு முன்னுள் கோப்பாய் எம். பீ. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பிரதமருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் நேற்று அனுப்பிவைத்த அவசரத் தந்தியில் கோரியுள்ளார்.

மேற்கூறிய பகுதிகளில்கடைகளைப் பூட்டுமாறு பொலிசார கோரினரென்றும் சில கடைகளில் அத்துமீறி நுழைந்து கடைக்காரர்களை வற்புறுத்தினரென்றும் புகார் செய்யப்படுகிறது.

(நமது மாவிட்டபுரம்நிருபர் எழுதுவதாவது)

காங்கேசன் துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை பகுதிகளில் பொலிசார் நடந்துகொள்ளும் முறைகளினல் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

காங்கேசன்துறையில்நேற்று முன்தினம் வீதியால் சென்ற பொதுமக்கள் சிலரை பொலிசார் தாக்கியதாகவும்தொடர்ந்தும் வீதியால் செல்லும் பொதுமக்கள் மீது பொலிசார் காட்டுமிராண்டித்தனமாக நடந்துவருவதாகவும கூறப்படுகிறது.

மாவிட்டபுரம் சந்தியில் இன்று பொலிசார் பெரும் அட்டகாசம் புரிந்ததாகவும் அங்கு ஒரு கடையில் கட்டப்பட்டிருந்த உதயசூரியன் கொடியை அறுத்துக் கிழித்து எறிந்ததுடன் கடைகளைப் பூட்டுமாறு கடைக்காரர்களைப் பயமுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவங்களையடுத்து பொதுமக்களுக்கு பெரும்பீதி உண்டாகியுள்ளது.

இச்சம்பவங்கள் குறித்து உடனடியாக தமிழர்விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த இப்பகுதிப்பொதுமக்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

## ஜெயபாலசிங்கம் தந்தி

''பொலிசாரின் அட்டகாசத்தினல் பொதுமக்கள் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளனர். உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்'' என்று காங்கேசன்துறை, பட்டினசபையின் முன்னுள் தலைவர் திரு. கே. ஜெயபாலசிங்கம் பொலிஸ் மாஅதிபரைத் தந்திமூலம் கேட்டுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

# இன்பம் விடுதலைமனு நிராகரிப்பு

கொழும்பு, வெள்ளி
துரையப்பா கொலைவழக்கின் 6 வது சந்தேகநபரான சனகாத்தினம் விலவசோதிரத்தினம் அல்லது இன்பம் என்பவரை விடுதலை செய்யுமாறு சமர்ப்பித்திருந்த மனுவை கொழும்புமாஜிஸ்திரேட் திரு. ரணராஜா இன்று தள்ளுபடி செய்தார்.

இவர் மீதான கொள்ளைக் குற்றச்சாட்டு இன்னும் ஓரிரு தினங்களில் யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது.

முன்னைய தீர்ப்பின்படி இவர் இம்மாதம் 26ம் திகதி வரை நீதிமன்ற... வார்.

அரசு, எதிர்தரப்பு சட்டத்தரணிகளின்றி தீர்ப்பு

கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ரணராஜா இன்று காலை 9-30 மணியளவில் இந்தத் தீர்ப்பை வழங்கியபோது அரசதரப்பு சட்டத்தரணிகளோ, எதிர்தரப்பு சட்டத்தரணிகளோ நீதிமன்றத்தில் இருக்கவில்லை

காலை 10 மணிக்கே சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு வந்தனர். (ம-இ)

இணுவில் இரட்டைக்கொலை:

# பொலிஸ மரியாதையுடன் இறுதி ஊர்வலம்

## டி. ஐ. ஜி. யும் கலந்துகொண்டார்

யாழ்ப்பாணம், சனி
இணுவிலில் சுட்டுக்கொல்லப்பட்ட இருபொலிஸ்கான்ஸ்டபிள்களின் இறுதி ஊர்வலம் நேற்று சகல பொலிஸ் மரியாதையுடனும் நடந்தது.

காங்கேசன் துறைப்பொலிஸ் நிலைய துப்பறியும் பிரிவைச் சேர்ந்த சண்முகநாதனும், வல்வெட்டித்துறைப்பொலிஸ்நிலையத் துப்பறியும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சண்முகநாதனும் இனந்தெரியாத இரு வாலிபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. இக்கொலை சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சகல சமய ஆசாரங்களும் முடிவடைந்ததும், இருகான்ஸ்டபிள்களின் பூதவுடலும் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டது. பூதவுடல்களைப்

8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப் பகுதியில் சிங்கள பொலிஸே!

கொழும்பு, வெள்ளி
இணுவிலில் பொலிசாரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்த சம்பவத்தை அடுத்து தமிழ்ப் பிரதேசங்களில் நூற்றுக்கு நூறுவீதம் சிங்களப் பொலிசார் நியமிக்கப்படலாமெனத் தெரிகிறது.

பொலிஸ் தலைமைக்காரியாலயம் இப்போது இதுபற்றி ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது.

முன்னர் ஐ. தே. க. ஆட்சியில் 50 வீதம் சிங்களப்பொலிசாரும் கடந்த அரசின் ஆட்சியில் 75 விதம் சிங்களப் பொலிசாரும் தமிழ்ப்பிரதேசங்களில் கடமைபுரிந்து வந்தனர் என்பது தெரிந்ததே. (ம-இ)


## தேவை

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் சுருக்கெழுத்து-தட்டச்சு தராதரம் உள்ளவர்கள் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு உடன் விண்ணப்பிக்கவும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்,
யாழ்ப்பாணம்.

6248


# மகளுக்கோ மருகனுக்கோ தொகுதி கேட்கமாட்டேன்

## கட்சி குடும்பச்சொத்து அல்ல என்கிறுர் பிரதமர்

கொழும்பு, வெள்ளி
எனது மகளுக்கோ மருமகனுக்கோ தொகுதி ஒதுக்கீடு செய்யும்படி கேட்பதில் எதுவித நியாயமுமில்லை. நான் அப்படிக் கேட்கவும் மாட்டேன். கட்சி எனது குடும்பச் சொத்தல்ல.

இவ்வாறு பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்கா கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளா நியமனக்குழுக் கூட்டத்தில் ஆக்ரோஷத்துடன் தெரிவித்தார்.

ஆனல் மகன் அனுரா பண்டாரநாயக்காவின் விஷயம் விஷயம் வேறு. அவர் நீண்ட நாட்களாக சுதந்திரக்கட்சி வாலிபமுன்னணியில் இருந்து கொண்டு இப்போது தேர்தலில் போட்டியிடுகிறுர் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (இ)

## புதிய சமஷ்டிக்கட்சி

யாழ்ப்பாணம். சனி
புதியசமஷ்டிக்கட்சியொன்று உதயமாகியுள்ளது. இக்கட்சி கடந்த 15 ம் திகதி மானிப்பா

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

## மாணவர் வதிவிடங்கள்

இவ்வளாகத்தின் மாணவர்களுக்கு வதிவிட வசதியை வழங்க விரும்பும் யாழ்ப்பாண வளாகத்தின் (திருநெல்வேலி, வட்டுக்கோட்டை ஆகிய இரு இடவளவுகளினதும் ஐந்து மைல் சுற்றுடலில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 1977 மே 30-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக என்னை வந்தடைதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை சொந்த முகவரியிட்ட முத்திரையுடன் கூடிய மேலுறையை (9"×4") அனுப்பிவைப்பதன் மூலம் அல்லது நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக அடிப்படையான தளபாடங்களை அளிக்கும் விடுதிகள் விரும்பப்படுகின்றன.

இணைப்பதிவாளர்.
இலங்கைப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
12-05-1977. 6178

---

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை.

## வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்

தரம் பிரிக்கப்படாத சுமார் 4300 வெற்றுச்சாக்குகளின் விற்பனைக்குரிய கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. கேள்விப் பத்திரங்கள் பின்வரும் விலாசத்திற்கு ரூபா 2/50 செலுத்தி சங்கத்திலிருந்து பெறப்பட்ட பத்திரத்தில் 30-5-1977 திகதிக்குப்பிந்தாமல் கிடைக்கக் கூடியவாறு பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பப்படவேண்டும்.

கேள்விப்பத்திரப் படிவங்கள் சங்க வேலை நேரத்தில் 30-5-77-ந் திகதி பகல் 12 மணி வரை விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் ரூ. 250/- வைப்புச் செலுத்தி இருக்கவும் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
19-5-77. 6237

---

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

## NIET வெல்டிங் டிப்ளோமா

உங்கள் சந்தோஷமான எதிர்காலத்திற்கு
ஒரு நல்ல பாஸ்போட்
விபரங்களுக்கு: 2-ம் பக்கம் விளம்பர இல 6210 பார்க்கவும்.

---

## தேவை

க. பொ. த. உயர்தர வகுப்புக்கு தூயகணிதம், பிரயோக கணிதம், இரசாயனம் கற்பிக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும்.

அதிபர்.
புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை.
6234

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

வழ: இல. ஈடு/11657
1. பதஞ்சலிநாதன் சிவஞானதனும் பெண்
2. மங்கையர்க்கரசியும் வண்ணார்பண்ணை கிழக்கு.
யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

எதிராக
1. வைத்திலிங்கம் விக்னேஸ்வரனும் பெண்
2. செல்வராணியும் இல. 87, பலாலி ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு/14657-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 14-ந் திகதி (14-6-77) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 7,750/-ம் 3-12-74 தொடக்கம் இறுக்கும்வரை ரூபாய் 5,000/- 11% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 561-15 சதம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கிறை "கற்குளம்புலம்" நில. பர. 8 எட்டும், வீடும் பயிர் வலகைளும் கிணறும். எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு கை ஒழுங்கை மேற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் பெண் நாகமுத்துவுக்கும். உரிய ஆதனம், தெற்கு கந்தர் முருகேசுவுக்கும் கந்தர் மைபெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம். இதடங்கலும். இதற்குட்பட்டவை சகலதும்.

அ. போ. எதிர்மன்னசிங்கம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
19-3-77. 6238

---

## இளைஞர் முயற்சியில் பஸ் தரிப்பு நிலையம்

வேலணை, வெள்ளி

கொய்யாத் தோட்டச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையமொன்றை அமைப்பதற்கு கொய்யாத் தோட்ட இளைஞர் மன்றத்தினர் முன்வந்திருக்கின்றனர். இந்த பஸ் தரிப்பு நிலையம் கட்டுவதற்கான நிதிசேர்க்குமுகமாக நாளை "மங்களவாசா" என்னும் சமூகசீர் திருத்த நாடகமொன்றை நடாத்துகின்றனர்.

---

வலி-கிழக்கு
தென்பகுதிபலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

ஷெ சங்கத்தில் 10,000 வெற்றுச்சாக்குகள்வரை கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றது. 26-5-77 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை 25-5-77 புதன் கிழமைவரை ஷெ சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 1/-ம் வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்துதல்வேண்டும்.

மேலதிக நிபந்தனைகளையும் விபரங்களையும் ஷெ சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். எல்லாக் கேள்விப் பத்திரங்களும் பொதுமுகாமையாளர்க்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். எக்கேள்விப்பத்திரமும் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமை உண்டு. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
நீர்வேலி,
1977-05-19. 6241

---

## கேள்வி விளம்பரம்

உரும்பராய் — ஊரெழு
பட்டணசபை

### உரும்பராய் பொதுச்சந்தை கட்டிட வேலை

மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் என்னால் 1977-ம் ஆண்டு யூன் மாதம் 9-ந் திகதி பகல் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 25ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 200ம் செலுத்தி யூன் மாதம் 7-ந் திகதி பிற்பகல் 2 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும் அல்லது கந்தோரில் உள்ள கேள்விப்பெட்டியில் போடவேண்டும். பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணம் அவர்கட்கும் பதிவுத்தபாலில் ஓர் பிரதி அனுப்பப்படல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்கள் எனது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. செல்லத்துரை,
தலைவர்,
பட்டினசபை,
உரும்பராய் ஊரெழு.

பட்டினசபை அலுவலகம்,
உரும்பராய்-ஊரெழு.
19-5-77. 6240

---

## ஜெயக்கொடிக்கு பாராட்டு

நெல்லியடி, வெள்ளி.

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பால் திரு, இராசலிங்கத்தைப் போட்டியிட சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு பல சிறுபான்மைத் தமிழர்கள் உடுப்பிட்டி. எம். பி ஜெயக்கொடிக்குப் பாராட்டுத்தெரிவித்துள்ளனர்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள சமூக பொருளாதார அபிவிருத்திக்குழுவின் தலைவராக இருந்துவரும் திரு. ஜெயக்கொடி அக்குழுவினூடாகயாழ் குடாநாட்டில் உள்ள சிறுபான்மைத் தமிழர்களுக்கு நல்ல சேவை புரிந்தஅளவுடன், உடுப்பிட்டித் தொகுதியிலும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சிறுபான்மைத் தமிழர்களின் வாழ்வுக்குப் பல அபிவிருத்தித்திட்டங்களை ஏற்படுத்தித் தந்ததற்கும் சிறுபான்மைத்தமிழர்களைக் கொண்டதாது கோஷ்டி ஒன்று அவரை நேரில் சந்தித்துப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

...

## விவசாயிகள் துயர்

வேலணை, வெள்ளி

யாழ்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் உபஉணவுப்பயிர்களில் புழுத் தாக்கம் அதிகரித்துக் கொண்டுவருகின்றது.

விவசாயிகள் தங்களது பயிர்வகைகளில் பிடித்துள்ள பூச்சி புழுத்தாங்கங்களை அழிப்பதற்கான கிருமிநாசினிகளை பெற்றுக் கொள்வதிலும் கஷ்டப்பட்டு வருகின்றனர் எனக்கூறப்படுகிறது. (உ)

## அலங்கார உற்சவம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை கயாத்துறை ஆனந்தப்பிள்ளையார் கோவில் வருடாந்த அலங்காரவுற்சவம் இன்று ஆரம்பமானது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகளும் திருமுறை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. இம்மாதம் 29-ம்திகதி தெருவிதிவலத்துடன் உற்சவம் பூர்த்தியடையும்.

.. ...

## யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

பூனகரியைச் சேர்ந்தவருடைய: கல்வித்தகமை, பிறப்புச்சான்றிதழ்கள், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திரு. செ. சிவனேசனால் ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அ)

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம்புதிய ஸ்ரீறியோ கார் சசெற் — 2ஒலிபெருக்கிகளுடன் ஹூட் ருக்கை (இங்கிலாந்தில் செய்யப்பட்டது) பேஜோ 404— காருக்கான கண்ணாடி துடைப்பிகள். திர். 85, கொழும்புத்துறைவீதி, (உபதபாற்கந்தோருக்கருகாமையில்)யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். 6243

### தேவை

Book-keeping தகைமை உள்ள ஒரு பெண்ணும், கணக்காளர் பதவிக்கு ஒரு ஆணும் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6222

### வாடகைக்கு

நெல்லியடி மத்திய சந்தைக்கு முன்பாக யாழ்ப்பாண வீதியில் சகல வசதிகளும் கொண்ட கடை ஒன்று காலியாக உள்ளது. ஸ்ரோர் வசதிகளும் உண்டு. விபரங்களுக்கு:- ஆனந்தா ஸ்ரோர்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 6231

யாழ். நகரின் மத்தியில் சகல வசதிகளும் பொருந்திய வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு விடப்படும். தொடர்பு:- சி. சோ. ஜீவரட்ணம், ராணி சினிமா, யாழ்ப்பாணம். 6235

### வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas) மூன்று மாதம், இலெக்ரிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ ஆறு மாதம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புகள் எமது N.I.E.T. டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமானோர் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற்மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6210

---

## இளைஞர் சங்க நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வெள்ளி

விமன்காமம் இளைஞர் சங்க 32 ஆவது வருடாந்தப் பொதுகூட்டம் சங்கமண்டபத்தில், தலைவர் திரு. க. செல்வத்துரை, தலைமையில் நடந்த சமயம் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யபட்டனர். தலைவர். க. செல்த்துரை, உபதலைவர் த. சண்முகநாதன், செயலாளர் வே. பாலகிருஷ்ணன், பொருளாளர் த. மதியாமணி, உபபொருளார் சி.இலாகேந்திரா 5 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## விலை குறைப்பு

எங்கள் நாட்டில் ரூபாவின் மறு மதிப்பீடுகாரணமாக
மில்க்வைற் தயாரிப்பின்
விலைகுறைப்பு விபரம்.

"மில்க்வைற் சலவைப் பவுடர்"

துரித சலவைக்கு சிறந்தது.
கூடிய நீலம் கலந்து தயாரிக்கப்பட்டது.

| பழைய விலை | புதிய விலை |
| --- | --- |
| 1 இறு. பைக் 4-00 | 3-90 |

### மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233
தந்தி: மில்க்வைற்
கிளை: 79, மெசன்சர் வீதி,
கொழும்பு—12.
தொலைபேசி: 36063
6239

### பொதுநல நாடுகள் மகாநாட்டில்

# இடிஅமின் கலந்துகொள்ள அனுமதி வழங்குவதா?

## பிரிட்டிஷ் பிரதமர் இரகசிய ஆலோசனை

லண்டன், மே 20

லண்டனில் நடைபெறவிருக்கும் பொதுநல நாடுகளின் உச்சிமாநாட்டில் உகண்டா ஜனதிபதி இடி அமினையும் கலந்துகொள்ளஅனுமதிப்பதா என்பது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் தமது மந்திரிசபையை விசேடமாகக் கூட்டி இரகசியமாக ஆராய்ந்துள்ளார்.

இந்த இரகசியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு பற்றி தகவல் தெரிவிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உகண்டாவில் ஐ. நா. குழு

இதேவேளை உகண்டாவில் மனித உரிமைகள்மீறப்படுகின்றன என்ற புகார்தொடர்பாக நிலைமையை ஆராயும் பொருட்டு ஐக்கியநாடுகள் சபையின் விசேட தூதுக்குழு ஒன்று உகண்டாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இத்தகவலை ஐ. நா. பொ. ச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் வெளியிட்டார்.

தமது பிரதிநிதிகளுடன் தாம் தொடர்புகொண்டு நிலைமையை அறிந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### லட்சம் பேருக்கு மேல் கொலை

இதேவேளை, இடிஅமின் உகண்டா ஜனதிபதியாக 1971-ம் ஆண்டு பதவியேற்றதன் பின்னர் இங்கு ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று சர்வதேச ஜூரர் ஆணைக்குழு தகவல் வெளியிட்டுள்ளது. (உ)

---

### 355 அரசியல் கைதிகள் விடுதலை

திருவனந்தபுரம், மே. 20

கேரள அரசு சிறைவைக்கப்பட்டிருந்த 360 நக்ஸலைட்டுகளில் 355 பேரை விடுதலை செய்துள்ளது.

மத்திய அரசின் கொள்கைக்கிணங்கவே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (இ)

---

### 20 ஆயிரம் வேட்பாளர்

புதுடில்லி, மே. 20

அடுத்த மாதம் தேர்தல் நடைபெற உள்ள 10 மாநிலங்களிலும் 3 யூனியன் பிரதேசங்களிலும் 20 ஆயிரம் அபேட்சகர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கள் செய்துள்ளனர்.

---

### வயதுவராத வேட்பாளர்கள்

சென்னை, மே 20

தமிழ்நாட்டில் இரண்டு தொகுதிகளில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய வயது வராத இரு வேட்பாளரின் வேட்புமனுக்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

தமது வேட்புமனுவை முன்மொழிய எவருமின்றி தாமே முன்மொழிந்த வேட்பாளர்ஒருவரின் மனுவும் ரத்துச்செய்யப்பட்டது. (இ)

---

### தமிழ்நாடு தேர்தல்:

## எம்.ஜி.ஆர்.கட்சி வேட்புமனு பவானியில் நிராகரிப்பு

### கிள்ளியூரில் தி. மு. க. வாபஸ்

சென்னை, மே. 20

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பவானித் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் தாககல் செய்திருந்த வேட்புமனு தேர்தல் பரிசிலனைக் குழுவினரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வேட்பாளர் அதே தொகுதியைச் சேர்ந்த வாக்காளர் அல்ல என்ற காரணத்தால் இந்த நிராகரிப்பு நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 9 வேட்பாளர் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர் மனுக்களை வாபஸ்பெறுவதற்குரிய கடைசி நாள் நாளையாகும்.

### தி. மு. க. வேட்பாளர் வாபஸ்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிள்ளியூர் தொகுதியில் விமானவிபத்தில் பலியான தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பொன்னப்பநாடாரின் மகன் விஜயராகவன் ஜனதா கட்சி வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

இதனையடுத்து தி. மு. க. வேட்பாளர் ரசல்ராஜ் தமது வேட்பாளர் மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

விஜயராகவனை ஆதரிக்கும் வகையில் இந்த வாபஸ் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

### 24வேட்பாளர் தொகுதி

கோயம்புத்தூர்த் தொகுதியிலேயே ஆகக் கூடுதலாக 24 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பெரம்பூர், கிருஷ்ணராயபுரம் ஆகிய தொகுதிகளில் மிகக்குறைந்த வேட்பாளர்கள் நான்குபேர் போட்டியிடுகின்றனர்.

### பாண்டிச்சேரியில்

பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் மனுக்களில் ஜனதா கட்சி வேட்பாளர் ஒருவரின் மனு நிராகரிக்கப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

---

### 200 யுத்தக் கைதிகளுக்கு விடுதலை

புதுடில்லி, மே 20.

இந்திய சிறைகளில் வைக்கப்பட்டிருக்கும் 200 பாகிஸ்தான் கைதிகளை விரைவில் விடுதலை செய்வதென இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

71ம ஆண்டுமுதல் இரண்டு நாடுகளிலும் சிறையில் இருக்கும் யுத்தக்கைதிகளை பரிமாற்றம் செய்து கொள்ளலாமென 76ம் ஆண்டு மே மாதம் இரு நாடுகளும் தீர்மானித்திருந்த போதிலும் பார்க்க இதுவிஷயத்தில் மெதுவாக இயங்குவதால் அந்நாட்டின் செயலுக்கு காத்திராமல் 200 கைதிகளை விடுவிப்பதென இந்திய அரசு தீர்மானித்துள்ளது. (இ)

---

### "திரைப்படங்கள் மூலம்

## சமுதாயத்துக்கு நன்மை கிடைக்க வேண்டும்"

### தமிழக ஆளுநர் கூறுகிறார்

சென்னை, மே 20

"திரைப்பட விழா நிகழ்ச்சிகள் நட்பு நாடு ஒன்றை மற்ற நாடு தெளிவாகப்புரிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கின்றன" என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி சென்னையில் நடைபெறும் அல்ஜீரியத்திரைப்பட விழாவில் பேசுகையில் கூறினார்.

"மனித சமுதாயத்திற்கு நன்மை தரவல்ல நற்கருத்துக்களையும் திரைப்படங்கள் கொண்டதாக அமையவேண்டும். வெறும்பொழுது போக்காக மட்டுமே திரைப்படங்கள் என்ற நிலைவிரும்பத்தக்கதல்ல" என்றும் ஆளுநர் தமது உரையில் கூறினார்.

"அல்ஜீரியாவில் நடைபெற்ற பாரத திரைப்படவிழா மூலம் அல்ஜீரிய மக்கள் எமது சமுதாய நிலையை அறிந்து கொள்ளமுடிந்தது. அல்ஜீரிய திரைப்படவிழாமூலம்அந்நாட்டின் நிலையை எமது நாட்டவர் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது" என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஒருவாரத்திற்கு இத்திரைப்பட விழா சென்னையில் நடைபெறும். (உ)

---

### "ஈழத்திலிருந்து குடிபெயர்ந்தோர் துயர்தீர நடவடிக்கை எடுங்கள்"

### இந்தியப் பிரதமருக்கு கருணாநிதி தந்தி

சென்னை, மே. 20

இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து பாரதம் வந்துள்ளோரின் நலன்குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பிரதம மந்திரி திரு.மொரார்ஜி தேசாயைத் தந்திமூலம் கேட்டுள்ளார்.

இவர்கள்துயர்தீர நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது மிகமிக அவசியம் என்று கலைஞர் இத்தந்தியில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில்இருந்து வந்த தனையடுத்து ஆந்திராவில் குடியமர்த்தப்பட்டவர்கள் தம் இடர்குறித்து சாத்வீகரீதியிலானபோராட்டத்தில் இறங்கியுள்ளனர்என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. (உ)

---

### லேலண்ட் ஊழல் புகார்:

## விசாரணை நடத்த பிரதமர் கலகன் உத்தரவு

லண்டன், மே. 20

பிரிட்டிஷ் அரசாங்கம் பிரிட்டிஷ் லேலண்ட் கொம்பனியில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல் புகார் தொடர்பாக உயர் மட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

1975-1976ம்ஆண்டுகளுக்கு இடையில், நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்த ஊழல் புகார் பற்றி உயர் மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ள தகவலை பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் ஆட்சி மன்றத்தில் வெளியிட்டார்.

ஊழல்கள் முற்றுகக்களையப்படுவதற்கு தமது அரசாங்கம் தீவிரமான, பாரபட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (உ)

---

# அமெரிக்க - ரஷ்ய நட்புறவு மலரும் அறிகுறி!

ஜெனீவா. மே. 20

ஆயுத பாவனைக்குறைப்புத் தொடர்பாக அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படுவதாகஜெனீவாவில் இருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன.

ஜெனீவாவில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் லான்சும், சோவியத் யூனியன் வெளி நாட்டமைச்சர் திரு. குரோமி கோவும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள்நடத்தி வருகின்றனர்.

### மேலும் ஒருநாள் நீடிப்பு

இப்பேச்சுவார்த்தைகள் மேலும் ஒருநாளைக்கு நீடிக்கப்படவிருக்கின்றன.

இந்நீடிப்பு பேச்சுவார்த்தை நல்ல பலனளிக்கும் என்பதை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இருநாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நட்புறவுக்கு இது வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

---

### 36 பெண்கள் போட்டி

சென்னை, மே.20

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் 36 பெண்கள் போட்டியிடுகின்றனர்.

ஜனதாகட்சியிலேயே அதிகம் பெண்கள்அதாவது 10 பேர் போட்டியிடுகின்றனர்.

தி. மு. க. வில் 7 பெண்களும் காங்கிரஸ் அ. இ. அ. தி. மு. க ஆகிய கட்சிகளில் தலா 5 பெண்களும் மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட்கட்சியில் பெண் ஒருவரும் போட்டியிடுகின்றனர்.

சுயேச்சை வேட்பாளர்கள் 8 பேர். (க)

---

### ம.கிழக்கு நிலைமை:

# சவூதி அரேபியா, சிரியா, எகிப்து தலைவர்கள் றியாத்தில் சந்திப்பு

கெய்ரோ, மே. 20

இஸ்ரேலில் சமீபத்தில்நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிக்சோயிட் கூட்டணிவெற்றி பெற்றிருப்பது மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு யுத்தம் மூளுவதற்குரிய சூழ்நிலையை தோற்றுவித்திருக்கிறது என அரபு நாடுகளின் தலைவர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### றியாத்தில் தலைவர்கள்

இதேவேளை சவூதி அரேபிய மன்னர் காலித், சிரிய ஜனதிபதி அசாத், எகிப்திய ஜனதிபதி அன்வர் சதாத் ஆகியோர் றியாத்தில் கூடி மத்தியகிழக்கு விவகாரம் குறித்து ஆராய்ந்தனர் ஸ்ரேல் பொதுத்தேர்வல் முடிவு குறித்து இத்தலைவர்கள் முக்கியமாக ஆராய்ந்தனர் என்று றியாத் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இத்தேர்தல் முடிவு யுத்தப் பிரகடனத்திற்கு சமமானது என்று பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்காது.

இதே வேளை மத்திய கிழக்கில் சமாசம் நிலவுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்சொண்டு வருகின்றன. (உ)

மணிவாக்கு

உழைக்காமல் உண்டுகொண்டிருப்பவன் பிறரிடமிருந்து களவாடப்பட்ட உணவையே உண்கின்றான்.

- காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

[தேர்தலுக்குத் திகதி குறித்தாகிவிட்டது. தேர்தல் களத்தில் பல கட்சிகளும் புலரும் மும்முரமாக இறங்கி ஆதரவு தேடத் தொடங்கிவிட்டனர். சென்ற மாதம் 27-ந் திகதி வெளிவந்த ஆசிரிய தலையங்கத்தை இன்றுமீண்டும் தமிழ்மக்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் நினைவூட்டுவது பொருத்தமென்பதால் அதை இன்றுமீண்டும் இங்கு தருகிறோம். -ஆசிரியர்]

# குளத்தைக் கலக்கி . . .

ஈழத் தமிழ் மக்களின் இன்றைய இலட்சியம் என்ன?

சுயநிர்ணய உரிமையுள்ள சுதந்திர சமூகமாக வாழ வேண்டும்.

இதுதான்—

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவைகளை அங்கமாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி—

தமிழர் சுயாட்சிக் கழகம்—

தமிழ் ஈழத் தொண்டர் சபை—

ஆகிய கட்சிகளின் கொள்கையும் இலட்சியமும் இதுவே.

வெவ்வேறு தலைமையில் இந்த மூன்று கட்சிகளும் இயங்கினாலும் அவைகளின் ஒரே நோக்கம் தமிழ்மக்கள் சுதந்திரமாகச் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கான 'தமிழ் ஈழம்' அமைப்பதே.

தேசியக்கட்சி என்ற ரீதியில் இயங்கும் மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும்கூட, தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டுமென்றும் இதற்குப் பிரதேச சுயாட்சியே வழியென்றும் தனது கொள்கையை வகுத்துள்ளதுமல்லாமல் குறிப்பிட்ட தமிழ் மக்களின் இயக்கங்களோடு தேசிய அரசுப் பேரவைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டிபோடாது அவ்வியக்கங்களுக்குத் தம்மாலான உதவியை வழங்கவும் தீர்மானித்துள்ளது.

தமிழ் ஈழம் கிடைக்குமா; தமிழர் தனியாகப் பிரிந்து வாழமுடியுமா; இந்தக் கொள்கையால் யாருக்கு இலாபம் என்ற கேள்விகளை ஆராய்வது இத்தலையங்கத்தின் நோக்கமல்ல. இப்போது அது அவசியமும் இல்லை.

வெவ்வேறு தலைமையில் இயங்கினாலும் ஈழம் வாழ் தமிழ்மக்களுக்கு வழிகாட்ட வந்துள்ள மூன்று கட்சிகளின் நோக்கமும் ஒரே அடிப்படையான தமிழ் ஈழமே.

பிரதேச சுயாட்சிக் கொள்கையை வகுத்துள்ள கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளது.

பொதுத் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் மூன்றும் போட்டியிடத் தீர்மானித்துள்ளன. இதற்காக வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் அவை ஈடுபட்டுள்ளன.

தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற்று கடந்த கால் நூற்றாண்டுக்குள் பெரும் வளர்ச்சியடைந்த கட்சிகளைக் கொண்டதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி.

இந்தக்கூட்டணி பொதுத் தேர்தலையும் பேரவையையும் தமது இலட்சியத்தை அடைவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துவதே நோக்கமென்று தெரிவித்து வந்துள்ளது.

இன்று வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் கூட்டணிக்குள் எழுந்துள்ள நிலைமை ஈழத் தமிழ் மக்களுக்கு நிச்சயம் பெருமை அளிக்க மாட்டாது.

பேரவைக்குச் செல்வது தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கமல்ல என்று தமிழர் விடுதலைக் கூட்டணி பகிரங்கமாகத் தெரிவித்திருந்தும், தேர்தலில் நிற்பதற்காக இப்போது நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் வேதனையளிப்பதாகும்.

தமிழ் மக்களின் பிரச்னைகளை உலகறியச்செய்து தார்மீக ஆதரவுதேடிக்கொண்டு தேர்தலில் நிற்பதற்கு அடிபடுவது தமிழ் மக்களின் மதிப்பை உயர்த்தாது.

தேர்தலில் நிற்பதற்கும் பேரவைக்குச் செல்வதற்கும் தமிழ்மக்கள் மத்தியில் முட்டி மோதிக்கொண்டு ஒரே கொள்கைக்காகப் பலர் போட்டியிடுவது, குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரைகொடுத்த கதையாகவே முடிந்துவிடும்.

தமிழ்க்கட்சிகளும் தமிழ் மக்களும் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கட்டம். இது என்பதைமீண்டும்வலியுறுத்துகிறோம்.

## ரூபா 500 உதவிப்பணம்: சமூக சேவைப்பகுதி வழங்குகிறது

வேலணை, வெள்ளி

சமூக புனர்வாழ்வுத்திட்டத்தின்கீழ் உதவிப்பணம் பெறும் குடும்பங்களுக்கு சமூகசேவைப் பகுதி 500 ரூபா வழங்க முன்வந்திருக்கின்றது.

இத்திட்டத்தின்கீழ் கடந்த வாரம் யாழ்ப்பாணம் கச்சா மட்டை வீதியில் உள்ள வலது குறைந்த ஒரு இளைஞனுக்கு சமூகசேவைப்பகுதி சைக்கிள் கடை ஒன்றை திறந்து கொடுத்தது. இந்த சைக்கிள் கடையை யாழ். மாவட்ட சமூகசேவைப் பகுதி உதவி ஆணையாளர் திரு. க. கெங்காதரன் திறந்துவைத்தார்.

சமூகசேவைப்பகுதிவழங்கும் இப்பணம், சிறிய தொழில்களை அல்லது விவசாய, மற்றும் கால்நடை, கோழிப்பண்ணைகளை ஆரம்பிக்க உதவியாக இருக்கும் என்று சமூகசேவைப் பகுதியினர் கூறுகின்றனர்.

ஐ. தே. கட்சி

# 161 தொகுதிகளில் போட்டி

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசியக் கட்சி தனது அபேட்சகர் பட்டியலைத் தயாரித்துவிட்டது. 161 தொகுதிகளில் போட்டியிடும் இக்கட்சி, 147 தொகுதிகளுக்கான நியமனங்களை முடித்துவிட்டது. மிகுதி 14 தொகுதிகளுக்கும் இவ்வாரம் முடிவு செய்யப்படும் என்றும் உத்தியோகபூர்வமான வேட்பாளர் அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட சில முக்கிய தொகுதிகள் வருமாறு:-

கொழும்புமத்தி- ஆர். பிரேமதாச, ஜாபிர் ஏ. காதர். கொழும்பு வடக்கு- எம். வின்சென்ட் பெரேரா. கொழும்பு கிழக்கு- எட்மண்ட் சமரவிக்கிரம, கொழும்பு மேற்கு- ஜே. ஆர். ஜெயவர்த்தன, பொரளை- எம். எச். மொகமட், தொம்பே. எஸ். சி. ராஜகருண, அத்தனகலை- ஏ. டபிள்யூ. ஜி. செனிவரத்ன. மாத்தளை-அலிக் அலுவிகாரை, மகாநுவர- ஈ. எல். சேனநாயக்கா, நுரரளை- மஸ்கெலியா- காமினி திஸநாயக்கா.

கிளிநொச்சி- என். கனகசூரியர், மன்னார்- எம். எஸ். எவ். ரஹீம், வவுனியா- கே. ரி. புலேந்திரன், திருகோணமலை- வி. எம். நவரத்தினராஜா, சேருவில- எச். டி. எல். லீலாரத்ன, மூதூர்- எம். எம். எச். மஹ்றூவ், கல்குடா- கே. டபிள்யூ. தேவநாயகம், மட்டக்களப்பு- டாக்டர் பரீத் மீராலெப்பை, பட்டிருப்பு- பி. ரத்னசிங்கம், சம்மாந்துறை- எம். எச். அப்துல் மஜீத், கல்முனை- ஏ. ஆர். எம். மன்சூர், பொத்துவில்- எம். ஏ. எம். ஜலால்டீன்.

பதினொன்கு தேர்தல்தொகுதிகளான அவிசாவளை, காலி, மெதிரிகிரிய, முல்லைத்தீவு, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகியவற்றில் யாரை நியமிப்பது என்பது நாளை முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

## 'ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்'

யாழ்ப்பாணம், சனி

'தமிழ்மக்களின் ஏகத்தலைவனும், தமிழர் தம் விடுதலைக்காக அயராது அரும்தொண்டாற்றி அவர்கள்தம், அரசியல் அவலநிலையை அகில உலகும் அறியச்செய்து அதற்கு விமோசனம் தேடும் நேரத்தில் மூதறிஞர் செல்வா மறைந்தது தமிழ்மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகுமென அராலி கிராம சபையில் நடந்த கூட்டத்தில் சபைத் தலைவர் திரு. இ. நாகலிங்கம் கூறினார்.

கிராம சபையின் அஞ்சலித் தீர்மானத்தின் மீது அவர் தொடர்ந்து பேசுகையில் அன்னாரின் ஆத்மா சாந்திபெற தமிழ்மக்கள் அவர் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்றார்.

கூட்டமுடிவில், பிரதம விகிதர் திரு. ஆர். ஏ. பேராயீரம் மறைந்த தலைவருக்கு நேரில் அஞ்சலி செலுத்த வசதியாக வேலைநேரத்தில் அனுமதியளித்தமைக்காக அராலி கிராம சபை தலைவருக்கு நன்றி தெரிவித்தார். (கெ)

## சேக்கிழார் விழா

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை சேக்கிழார் மன்றம் ஒவ்வொரு வருடமும் நடாத்தும் சேக்கிழார் விழா எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில், காலை 9மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நிகழ்ச்சி இரண்டுநாட்களுக்கு நடைபெறும். இவ்விழாவில், பிரதமவிருந்தினராக, அண்ணாமலைப்பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. செ. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். சேக்கிழார், திருவுருவப்பட ஊர்வலமாக வண்ணை, ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலிருந்து யாழ்ப்பாணம், இந்துமகளிர் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்படும். முதல் நாள் நிகழ்சிகளில், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திரு. க. சொக்கலிங்கம். திரு. வித்துவான் சி. குமாரசுவாமியின் சமயக்கருத்துரைகளும், திருமுறை ஓதல், திருமுறை இன்னிசை விருந்தும் நடைபெறும்.

மறுநாள் நிகழ்ச்சிகளில் சிவத்தமிழ் செல்வி பண்டிதை. சைவப்புலவர், தங்கம்மா அப்பாக்குட்டி, திரு எம். எஸ். ஸ்ரீதயாளன், திரு. சி. விசுவலிங்கம் ஆகியோர் பேருரை நிகழ்த்துவார்கள். (கெ)

முல்லைத்தீவு

## பஸ்சேவை சீர்கேடு: சங்கத்தலைவர் முறையீடு

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு பகுதி பஸ் சேவை சீர்கேடுகுறித்து முல்லைத்தீவு பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. ரி. எஸ். தியாகலிங்கம் முல்லைத்தீவு டிப்போ அத்தியட்சகரைச் சந்தித்து முறையிட்டார்.

இப்பகுதி பஸ் சேவை சீர்கேடாக உள்ளதாகவும் 17-ம் திகதி 89 முல்லைத்தீவு-காரைநகர் 85 முல்லைத்தீவு-யாழ்ப்பாணம், 82 முல்லைத்தீவு-வவனியா ஆகியபஸ்சேவைகள் முல்லைத்தீவு டிப்போவினால் நடத்தப்படாததால் பிரயாணிகள் அடைந்த மிகுந்த கஷ்டத்தையும் அவர் டிப்போ அத்தியட்சகர் திரு. வி. ஸ்ரீஸ்கந்தராஜாவிடம் எடுத்துரைத்தார்.

இந்த டிப்போவில் உள்ள பெரும்பாலான பஸ்கள் பழையனவென்றும் அதனால் பஸ்கள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றனவென்றும் இந்நிலை குறித்து தாம் வருந்துவதாகவும் மேலதிக பஸ்கள் தேவை என்ற தமது கோரிக்கையை தாம் மீண்டும் மேலதிகாரிகளிடம் வலியுறுத்துவதாகவும் அத்தியட்சகர் திரு. தியாகலிங்கத்திடம் தெரிவித்தார். (உ)

கொழும்பு மேற்கு

## தமிழ்ப்பெண் வேட்பாளர்: சுதந்திரக்கட்சி யோசனை

கொழும்பு, வெள்ளி

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, கொழும்பு மேற்குத் தொகுதியில் ஐ. தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை எதிர்த்து ஒரு தமிழ் பெண்மணியை அபேட்சகராக நிறுத்தவிரும்புவதாகத் தெரிகிறது.

தொம்பே தொகுதி வேட்பாளர் பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் இதன் காரணமாகவே வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதில் கட்சியின் தலைமைப்பீடம் காலதாமதம் செய்துவருகிறது என்றும் தெரிகிறது.

எனினும் இன்றுவேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொம்பே தொகுதியில் எம். பி.யாக இருந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா கொழும்பு மேற்குத் தொகுதியிலும் பிரதமரின் புதல்வியான செல்வி சந்திரிகா பண்டாரநாயக்கா தொம்பே தொகுதியிலும் போட்டியிடுவர் என்றும் முன்னர் கதைகள் அடிபட்டது தெரிந்ததே. (ம-இ)

## யாழ்.லயன்ஸ் நிதிகையளிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ் லயன்ஸ் களியாட்டு விழாமூலம் சேகரிக்கப்பட்ட நிதி, இன்று மாலை 4மணிக்கு, நல்லூரிலுள்ள யாழ்இன்ஸ் வீடுதியில், புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிறுவும் குழுவிடம் கையளிக்கப்படும். (கெ)

## தந்தை செல்வா தமிழணி மண்டபம்

செல்வ நாயகம் செந்தமிழ் மண்டபம்
திறக்கப் படவேண்டும்
செம்மைக் கலைசேர் சிற்பம் யாவும்
செதுக்கப் படவேண்டும்
உதய சூரியன் ஒளிரும் கொடியின்
உருவம் வரவேண்டும்
ஓதும் வடக்குக் கிழக்கு மலையகம்
உறுப்பு பெறவேண்டும்
சூரி யப்பிறை சந்தை முகத்தைச்
சுற்றி எழவேண்டும்
தூய தமிழணி மண்டப மென்றே
சொல்லத் திடம்வேண்டும்
தந்தை செல்வா தமிழணி மண்டபம்
தலைப்பே ரெழவேண்டும்
தலைவர் செல்வா உருவச் சிலையும்
சார்ந்து எழவேண்டும்.

—அரியாலையூர் வே. ஐயாத்துரை

# தமிழ்ஈழம் - அது ஒரு பகற்கனவு

இலங்கையில் தமிழ்ஈழம் சாத்தியமா?, என்னும் தலைப்பில் சென்ற வியாழக்கிழமை விவாதமேடையில் திரு. மு. ஏரம்பமூர்த்தி எழுதிய கட்டுரையின் இறுதிப் பகுதி இன்று இங்கு தரப்படுகிறது. அந்தக் கட்டுரைக்குப் பதிலாக திரு. எஸ். பி. கிருஷ்ணன் 'தமிழ் ஈழம்தான் ஒரே வழி' என்று கூறும் கட்டுரையும் இன்றைய மேடையில் இடம்பெறுகிறது. விவாதமேடையில் பங்குபற்ற விரும்புவோர் தயவு செய்து தங்கள் கருத்துக்களை இரத்தினச்சுருக்கமாக தாளில் ஒருபக்கத்தில் மட்டும் எழுதி அனுப்பவேண்டும்.

—ஆசிரியர்

தமிழ் ஈழம் பெறுவதற்கு அடுத்தவழி என்ன?

எல்லாத் தமிழரும் ஒன்றிணைந்து போர்க்கொடி உயர்த்துவதுதான் ஒரே வழி!

### ஆயுதம் பெறுவது எங்கே?

போர்க்கோலம் பூண்டால் மட்டும் போதாது; போரிட வேண்டும்; வெற்றிபெறவேண்டும். எதிரியோ ஆயுதம் ஏந்தாத மக்கள்கூட்டம் அல்ல, ஒரு நாட்டு அரசாங்கம்; ஆயுதபாணியான அரசாங்கம்! அதுவும் 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன் இருந்த அரசாங்கமல்ல, அப்போ பல நாடுகளிலுமிருந்து ஆயுத உதவிபெற்று, இன்று முன்னரிலும் பலத்துடன் விளங்கும் அரசாங்கம். அதை எதிர்க்கத் துணியும் நாமும் ஆயுதம் ஏந்தி நிற்க வேண்டும். ஆயுதங்களை நாமே சரிப்பண்ணமுடியுமா? அவை பலம்வாய்ந்த ஓர் ஆயுதப் படையை எதிர்த்துநிற்க உதவுமா? முடியாது?

வேறு, நாடுகளிலிருந்து தான் நாம் ஆயுத உதவிபெற வேண்டும், எந்தநாட்டிலிருந்து பெறுவது? எப்படிப்பெறுவது? எங்களுக்கு அண்மையிலிருப்பது தமிழ்நாடுதான், உதவ முன்வரக்கூடியதும் அதுதான். ஆனால் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாகாணம். தனி அரசுஅல்ல ஆயுதப்படையின் அதிகாரம் மாகாண அரசிடம் இல்லை. அதன்பொறுப்பு இந்திய அரசின் கையில் உள்ளது. தமிழ்நாட்டிடம் ஆயுதப்பெறுவது சாத்தியம் இல்லாமையால், நாம் இந்திய அரசின் தயவை நாடவேண்டும். தமிழக அரசு சிபார்சு செய்தாலும்கூட, இந்தியாவானது, இலங்கை அரசாங்கத்துக்கு மாறாக, தனித்துநிற்கும் எங்களுக்கு ஆயுத உதவி அளிக்க முன்வரும் என எதிர்பார்க்க முடியுமா? இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு, அது போராக மாறவேண்டிய சூழ்நிலை வந்தால், ஒருவேளை சாத்தியமாகலாம். அதுஎப்போ வரும்?... ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் அச்சூழ்நிலை உருவாகாமல் போகலாம்! அதை எதிர்பார்த்து அவ்வளவு காலமும் காத்திருக்க முடியுமா? அதனால் வேறு நாடுகளின் உதவியை நாம் நாடவேண்டும்.

அரபுநாடுகள் எங்களுக்கு உதவ முன்வரமாட்டா. முஸ்லிம்களின் பிரச்னையால் அவை உதவிசெய்ய விரும்பலாம். விரும்பினாலும்கூட அவை ஆயுத உதவிசெய்யும் நிலையில்இல்லை. அடுத்தது ரஷ்யா, சீனா முதலான சோஷலிச நாடுகள். அவை சோஷலிச ஜனநாயகப் புரட்சிப் போராட்டங்களுக்கு உதவி செய்வதுதான் நடைமுறை வழக்கம். எங்களுடையது வர்க்கப்போராட்டம் அல்ல பிரிவினைப்போராட்டம். தென் இலங்கையின்அரசியல்வளர்ச்சியானது, சோஷலிச நாடுகளை, அதன்பக்கம் ஈர்ப்பதாகவே இருக்கும்!

பிரித்தானியா இன்று தன்னைத்தானே சமாளித்துக் கொள்ளமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. ஆதலால் அங்குபோவதில் வேலையில்லை.

எங்களுக்குத் தஞ்சம் அளிக்க எஞ்சியிருப்பது அமெரிக்காவே! 'அமெரிக்கா நிச்சயமாக எங்களுக்கு உதவிபுரியும்' என நாம் எதிர்பார்க்கலாம். அதன்ஏழாவது கடற்படை இந்துசமுத்திரத்தில் வாய்ப்பான தளம் இல்லாமல் நடுக்கடலில் வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறது. எங்கோதொலை தூரத்தில் இருக்கும் டியர்கோ கார்சியா தீவுகளில் விமானத் தளம் அமைக்க என்று அமெரிக்கா கோடிகோடியாகக் கொண்டு போய்க்கொட்டுகிறது.

அரபுநாடுகள், இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலேசியா, இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கெல்லாம் கேந்திரஸ்தானத்தில் அமையுந் தமிழ்ஈழம், தளம் அமைக்கத் தனக்கு வாய்ப்பாக வருகிறதென்றால், அமெரிக்கா பறந்துவரும். நாங்கள் போதும் போதும் என்னும்அளவில் ஆயுதங்களை அள்ளிவந்து குவிக்கும்! ஆர்தான் வருகிற வாய்ப்பைநழுவவிடுவார்கள்? ஆனால் தமிழர்களாகிய எங்களில் கருணைகூர்ந்து தரவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

### படை தயாராகிவிட்டது

எப்படி எப்படியோ முயன்று ஆயுதங்களைக் கொண்டுவந்து சேர்த்து 2 லக்ஷம் வாலிபர்களை ஆயுதபாணிகளாக்கிவிடுவோம். அமெரிக்க நிபுணர்கள்வந்து ஆயுதப்பயிற்சிஅளிப்பார்கள்; இரண்டு மூன்று மாதங்களில் பலம் வாய்ந்த படை தயாராகி நிற்கும்!

இலங்கை அரசாங்கத்துக்கு, எங்களுக்கு அமெரிக்கா ஆயுதந்தந்ததும், பயிற்சிஅளித்தும் படை தயாராகநிற்பதும் தெரியாமல்போக நியாயமில்லை. அதனால் இலங்கை அரசாங்கமும் பல நாடுகளிலும் ஆயுதங்களை வாங்கத் தொடங்கும்.

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளுடன்கூட தென்னிலங்கையின் 100லக்ஷம் சிங்கள மக்களில் இருபது லக்ஷம்பேர் ஆயுதம் ஏந்துவார்கள்! ஆபத்து நேரும் என அந்நியநாடுகளின் உதவியும் வந்து சேரும். டாங்கிப் படைகள், பீரங்கிப்படைகள், காலாட்படைகள் அங்கிருந்து நகரத் தொடங்கினால் ... ...! இரண்டு லட்சம் வீரர்கள் எங்கே, இருபதுலட்சம் படைகள் எங்கே?

எங்களுக்கு இந்தநிலை. நேர நேரவேண்டுமா? பாழடைந்த கிணற்றில்போய் மூழ்கவேண் தமிழர் எல்லோருமே மூளை டுமா? கெட்டவர்களா? சிந்திக்கும்ஆற்றல் இல்லாதவர்களா?

மலைநாட்டுத் தமிழரைவிட, இலங்கைத் தமிழரான எங்கள் உற்றார் உறவினர் 5 லட்சம் பேர் வெளி மாகாணங்களில் வாழுகிறார்கள் அல்லவா? நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடமுன், அவர்களை எல்லாம் இங்கேகொண்டுவந்து சேர்த்துவிடவேண்டும்; இரண்டுமூன்று ஆண்டுகளுக்கிடையிலாவது அதைச்செய்து முடிக்கவேண்டும்; இவ்வளவில் அதைச் செய்தோமா? இனி எப்போ செய்வது?......

ஐந்து லட்சம்பேரும் அந்தந்த இடங்களில் தாங்கள் செய்துவந்த தொழில்களை இழந்து வெறும் ஆட்களாக இங்கு வந்து சேருவார்கள்; வந்தவர்கள்எல்லாரும் உடனே என்ன தொழிலைத் தொடங்குவது?

### வியாபாரஞ் செய்ய முடியாது

நாங்கள் சிங்களவருடன் போரிட்டுப் பிரிந்தவர்கள்; குறைந்தது இருபது ஆண்டுகளுக்காவது இலங்கையின் எந்தப் பகுதியிலுந்தலைகாட்டமுடியாது. எங்கள் விளைபொருள்களைவிற்கமுடியாது புதியதமிழ்

— மு. ஏரம்பமூர்த்தி —

ஈழத்திலே முன்னரிலும்பார்க்க இரண்டுமடங்கு பேராவது கமஞ்செய்வார்கள், இப்போ எங்கள் வெங்காயம், செத்தல் மிளகாய் கிழங்கு, புகையிலையை இலங்கை முழுவதிலுங்கொண்டு போய் நல்ல விலைக்கு விற்கிறோம், கல்வீடு கட்டுகிறோம், தங்கநகை பூட்டுகிறோம்! இனி அதைப்போல் இரண்டு மடங்கு விளைபொருள்களை எங்கு கொண்டுபோய் விற்பது?... அமெரிக்காவுக்கு அனுப்பலாமா? அவர்கள் எங்களது வெங்காயம் செத்தலை வாங்குவார்களா? தமிழர்கள் வாழும் எங்கள் தமிழ்நாட்டில் விற்கலாமா? கொல்லன் உலையில் ஊசி விற்கமுடியுமா?

ஒவ்வொரு நாளும் லொறிகள் மீன் பெட்டிகளைச் சுமந்து கொண்டு கொழும்புக்குப் போகின்றன. அதுபணமாக வருகிறது நிலப் பிரபுக்களின் காணிகளில் ஓலைக் குடிசைகளில் ஓலம்பாடிய மீனவர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். சொந்தக் காணிகளில்

(7-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ஈழம் தான் ஒரேவழி!

எஸ். பி. கிருஷ்ணன்

இலங்கையில் தமிழ் ஈழம் சாத்தியமா? எனக் கேட்டு திருவாளர் மு. ஏரம்பமூர்த்தி எழுதிய கட்டுரையைப் படித்தேன். பொருளாதார நிபுணர்களும், அரசியல் தலைவர்களும் இதற்கான பதிலைப் பலதடவைகளில் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைவிட மேலாக அதிகமாக நான் எதையும் சொல்லிவிடமுடியாது. என்றாலும் கட்டுரையாளருக்குப் பதிலளிக்கு முகமாகச் சில கருத்துக்களை எழுதுகிறேன்.

இந்த நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களின் ஆட்சி தமிழுக்கும் தமிழருக்கும் இழைக்கும் அநீதிகளை ஒழிக்க ஒரே வழி தமிழ் ஈழம் அமைப்பதுதான் என்ற முடிவை, அடிமை வாழ்வை விரும்பாதவர்களும் பெரும்பான்மையான தமிழ்மக்களும் பொருளாதார நிபுணர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்து சுமார் முப்பது ஆண்டுகளாக ஆட்சிசெய்தவர்கள் தமிழ் இனத்தை ஒழித்துக்கட்டும் கைங்கரியத்தைச் சாதுரியமாக வெற்றிகரமாகக் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

தமிழருக்குச் சமத்துவம் கேட்டுப் போராடிய பல தலைவர்களைத் தமிழினம் கண்டிருக்கின்றது. தமிழர் கோரிக்கை நியாயமானதுதான் எனக் கூறிய சில சிங்களத் தலைவர்கள்கூட அரச சுகபோகங்களை அநுபவிக்கவேண்டித் தம் கொள்கைகளை மாற்றிக் கொண்டதை யாரும் மறுக்க முடியாது.

முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காகூட 1937ல் இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சிதான் சிறந்ததென்று கூறியவர்தான் சேர் ஜோன் கொத்தலாவலை 1955ல் தமிழுக்குச் சமத்துவம் தருவேன் என்றவர்தான். கலாநிதி என். எம். பெரேராவும் தமிழுக்குச் சம அந்தஸ்துதான் தன் கட்சிக் கொள்கையென வெளிப்படையாகவே கூறிவந்தவர்தான். ஆனால் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவோ, அமைச்சர் பதவிக்காகவோ தம் கொள்கைகளை மாற்றிக்கொண்டவர்களும் ஏதுமறியாத சிங்களப் பாமர மக்களைத் தமிழருக்கெதிராக 'எழுச்சி'யூட்டிவிட்டவர்களும் இவர்கள் தான். தமிழர்களை அடித்தும் உதைத்தும் சுட்டும் கொண்டிருக்கும் அரச காவற்படையினர் தம்மைக் கேட்க யாருமில்லை என்ற சண்டித்தனம் கொண்டதும் அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள் சிலர் தமிழர்களை ஒதுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும், அந்த எழுச்சியூட்டியஉசார்தான். இன்றுசிங்கள இனம் முழுவதுமே தமிழினத்திற்கு எதிராகச் செயல்படுகிறதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இந்த நிலை இனி மாறாது.

எதை எடுத்தாலும் தமிழர் சிங்கள அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அடிபணிகின்ற நிலை- அடிக்கப்படும் போதும் ஐயா அடியாதே என்று கெஞ்சுகிற நிலை. கேவலம் தமிழ்மண்ணில், தமிழர் நாம் ஒரு கூட்டம் நடத்த ஒலிபெருக்கி அனுமதி கோரி

**விவாத மேடை**

னால் அதையும் பெறமுடியாத நிலையிலே தமிழன் வாழ்ந்து கொண்டிருப்பது நல்லதா? அல்லது—

விடுதலைபெற்று -தமிழ் ஈழம் பெற்று அங்கே தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக தம்மைத்தாமே ஆட்சிசெய்து தமிழ்ஈழமண்ணை வளப்படுத்தி தமிழ் ஈழத்தின் பொருளாதார வளங்களைச் சீர்படுத்தி வளமான பிற நாடுகளின் உதவியைப் பெற்று, நாமும் பாடுபட்டு உழைத்துச் சுதந்திரமாக வாழ முயல்வது நல்லதா?

தமிழ் ஈழப் பகுதியில் பொருளாதார ரீதியில் பல மூலவளங்கள் உள்ளென்று அந்நிய நாட்டு நிபுணரும் சொன்ன பிறகும் எமக்குச் சந்தேகமேன்? சோம்பலேன்?

ஒரு மாற்றத்தை நோக்கிச் செல்லும்போது எவருக்கும் துன்பத்தை அனுபவிக்க நேருமோ என்ற அச்சம் எழுவது இயல்புதான். தமிழ் ஈழத்தை வளப்படுத்தும்வரை நாம் சில துன்ப அனுபவங்களைக் கண்டுதானாகவேண்டும். கிளிநொச்சியிலும் முத்தையன் கட்டிலும் காட்டுநிலத்தை எடுக்கும் தமிழன் காடுவெட்டி கொளுத்தி வேர் பிடுங்கிப் பண்படுத்திக் கஷ்டப்பட்டுப் பின்னர்தான் மிளகாய் பயிரிட்டு அதிக லாபம்பெற்று மகிழ்கிறான்.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழ் ஈழத்தில் வந்து குடியேறி வாழ இடமுண்டு. வாய்ப்புண்டு. வளமுண்டு. எல்லோரும் வந்து, தமிழ் ஈழத்தை வளப்படுத்த உழைக்கவேண்டும். முதலில் இந்த உடலுழைப்பிற்கு விருப்பம் இல்லாதவர்கள் விரும்பினால் தாங்கள் இப்பொழுது வாழும் இடங்களிலேயே இருக்கலாம். பாகிஸ்தான் பிரிந்தவுடன் முஸ்லிம்கள் எல்லோருமே அங்கு ஓடிப்போய்விடவில்லை. இந்தியாவிலே ஏன் தமிழகத்திலே கூட முஸ்லிம்கள் வளமாக வாழ்கிறார்கள்.

தமிழ் ஈழம் ஒரு சமதர்மக் குடியரசாக மலரும். உலக நாடுகளுக்கெல்லாம் ஒரு 'மாதிரி' நாடாக இருக்க வேண்டும் தமிழ் ஈழம் என்பதுதான் எமது விருப்பம். முஸ்லிம் தமிழர் பேதமோ, பௌத்தம் சைவம் என்ற பேதமோ இருக்கமாட்டாது. யாவரும் தம் உரிமைகளை அனுபவிக்கும் சட்டவரம்பு இருக்கும். இருக்கவேண்டும் என்பதுதான் எமது விருப்பம்.

தமிழ் ஈழம் அமைக்க நாம் யாரையும் கேட்கவேண்டியதில்லை. நாம் ஏற்றுக்கொண்டால் அற்ப சலுகைகளுக்காக ஆள்வோரை அண்டி நிற்பவர்களும் காட்டிக்கொடுப்பவர்களும் கொஞ்சம் 'தியாகம்' செய்யவேண்டும். தமிழ் ஈழம் தானே மலரும்.

## வேலரும் மயிலரும்



மயிலர்: ஏன் அந்தப் பெண்ணுக்கு பயித்தியம் பிடிச்சுது.

வேலர்: அவவின் நாலு பிள்ளைகளும் தேர்தலில் போட்டி போடுகினம். யாருக்கு வோட்டுப் போடுகிறது எண்டு யோசிச்சாப் போல தட்டிப்போட்டுது.

சுந்தர்

# தேவரின் ‘திருவருள்’

விமர்சனம்

கலையழகும் திருப்பொழிவும் கொண்ட அழகான கோபுரத்துடன் யாழ் நகரில் திடீரென்று ஒரு ஆலயம் தோன்றியிருக்கிறதே பார்த்தீர்களா? பார்க்காவிட்டால் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டருக்கு முன்னால் ஒரு தடவை செல்லுங்கள் போதும்.

தியேட்டரின் வெளியில் ஒரு கோபுரம்தான். உள்ளே சென்றால்.—

ஆயிரக்கணக்கில் செலவிட்டு பாஸ்போர்ட், விசா என்று அங்குமிங்கும் அலைந்து சுங்கக் கெடுபிடிகள் எல்லாவற்றையும் தாண்டி தமிழகத்துக்கு யாத்திரை சென்றாலும் இவ்வளவு அருகே நின்று பார்க்க முடியாத முருகனின் ஆறு படை வீடுகளுடன் சாண்டோ சின்னப்பதேவர் இப்போது முருகனுக்கு ஏழாவது படையாக அமைந்துள்ள மருதமலை முருகனின் ஆலயத்தையும் தரிசிக்கும் பாக்கியம் பெறுவீர்கள்.

உண்மையான முருக பக்தன் ஒருவனைத் தரிசிக்கும்வாய்ப்பும் உங்களுக்குக் கிடைக்கும்.

அவன் வெறும் முருக பக்தனல்ல; நாகேஷ் கூறுவது போல அவன் உண்மையில் முருகபித்தன்தான்.

நடு வீதியில் நின்று குமாரதேவன் காவடியைத் தூக்கிக் கொண்டு ஆடுவதும் பாடுவதும் சுவாமி தரிசனத்துக்காக ஆலய வாசலில் அவன் படும் அவலமும் கோவில் திருப்பணியில்கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராக அவன் நடத்தும் போராட்டங்களும் மருதமலையான் அவனுக்கு அருள்புரியும் [illegible] காட்சிகள்.

தண்டாயுதபாணி பிலிம்சாரின் ‘‘திருவருள்’’ படத்தைத்தான் சொல்கிறேன்.

முருகபக்தனாக வரும் ஏ. வி. எம். ராஜனைக் காணவில்லை. உண்மையில் முருக பித்தனையே காண்கிறோம்.

குமாரதேவனின் நண்பனாக வரும் நாகேஷ் கச்சிதமாக நகைச்சுவையுடன் உருக்கத்தையும் சேர்த்து நடித்து மனதில் ஊன்றி விடுகிறார்.

ராஜனுக்கு ஜோடியாக வரும் வள்ளி ஜெயா ஈடு கொடுத்து நடிக்கிறார். நான்கு லட்சம் ரூபாவையும் கோவில் உண்டியலில் போடும்போது முருகா நான்கு லட்சம் கொடுத்தால் முருகன் நாற்பது லட்சம் கொடுப்பான் என்று அவர் சொன்னபோது அலட்சியம் செய்தேனே என்று சொல்லும் கட்டமும் நகைகளையெல்லாம் உண்டியலில் போட்டுவிட்டு ஆலய வாசலிலேயே பழி கிடப்பதும் உருக்கமான கட்டங்கள். தேவர்தான் கதைவசனம் தயாரிப்பு.

இந்த பங்களா எஸ்டேட் எல்லம் இன்று முதல் உனக்குச் சொந்தம் நான் மட்டும் உனக்குச் சொந்தமில்லை’’ என்று கணவன் மனைவியிடம் கூறுகிறார். இதுபோன்ற வசனங்கள் திருவருளுக்கு அருள் கூட்டுகிறது.

படப்பிடிப்பும் டைரக்‌ஷனும் நல்ல நடிப்பும் பக்தி பரவசமான பாடல்களும் திருவருளை ஒரு தடவையல்ல பல தடவைகள் பார்க்கவேண்டும் போலிருக்கிறது.

வண்ணக்கலரில் இயற்கையின் எழில்மிகு அழகுடன் பழனி ஆண்டவனுக்கு நடந்த மகாகும்பாபிஷேகம், திருச்செந்தூரில் நடந்த தங்கரத வெள்ளோட்டம், ஆண்டுதோறும் கொண்டாடும் ஆடிக் கிருத்திகை இன்னும் எத்தனையோ காட்சிகளைத் தத்ரூபமாக வண்ணக் கலரில் திரையில் எடுத்துக் காட்டிய பெருமைக்கு டைரக்டர் ஆர். தியாகராஜன் பாராட்டப்படவேண்டியவர். தேடிய செல்வ [illegible] தெய்வத் திருப்பணிக்கே என்று வாரிக் கொடுக்கும் கணவன்-குடும்பத்திற்கு போகத்தான் கோவிலுக்குக் கொடுக்கவேண்டுமென்று வாதாடும் மனைவி- முருகனின் சோதனைக்குட்பட்டு குமார தேவன்படும் இன்னல்கள்......!

‘‘மருதமலைக்கு வந்து பாருங்க’’ என்று சௌந்தரராஜன் பாடுவதுபோல் யாழ். ராஜா தியேட்டருக்குச் சென்று பாருங்க’’ என்று நான் பாட முடியாவிட்டாலும் சொல்கிறேன்.

— சிலோன் சந்திரன்

# காவலூர் வைத்தியர்கள் சங்கம் அமைத்தனர்

வேலணை, வெள்ளி

ஊர்காவற்றுறைத் தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து புதியதோர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்.

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் தற்காலிக தலைவர் வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: வைத்திய கலாநிதி மு. க. சிற்றம்பலம், உப தலைவர்: ஆ. கந்தையா, இணைச் செயலாளர்கள்: க. திருலோகமூர்த்தி, பி. பி. ஜே. நீக்கிலஸ் பொருளாளர்: திரு. ஐ. பாலசுப்பிரமணியம். மற்றும் தீவுப் பகுதி அனைத்திலுமிருந்து சங்க உறுப்பினராக ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட சித்த வைத்தியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இச்சங்கம் மறைந்த தலைவர் தந்தை செல்வநாயகத்திற்கு இருநிமிட மௌன அஞ்சலியைச் செலுத்தியது. வைத்திய கலாநிதி மு. வினாசித்தம்பி அவர்களுக்கும் இரு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது. (உ)

கொழும்புத்துறைக்குச் செல்ல

# 29 பலாலி ஆசிரியமாணவர் விரும்ப வில்லையாம்

யாழ்ப்பாணம், சனி

பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலையைச்சேர்ந்த 29 வர்த்தக ஆசிரிய பயிற்சி மாணவர்கள் கொழும்புத்துறை பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லவிரும்பவில்லை என்று இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி எஸ். கே. வணசிங்கா கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

‘‘கொழும்புத்துறைக்குச் செல்ல 21 முஸ்லிம்களும் எட்டுத் தமிழர்களும் விரும்புகிறார்கள் இல்லை. கொழும்புத்துறையில் தொழுகை வசதிகள் இல்லாததால் முஸ்லிம்கள் போக விரும்புகிறார்கள் இல்லை, தமிழர்களும் அங்கு வசதிக்குறைவு இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

இதுசம்பந்தமாக நீதியான முறையில் நடவடிக்கை எடுக்கவும்’’ என்று கல்வி அமைச்சருக்கு ஆசிரிய சங்கத் தலைவர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரியில் போதனைபெறும் மாணவ மாணவிகள் மிகக் குறைவாகவே உள்ளார்கள் என்றும் பெரும்பாலான மாணவ மாணவிகள் விரிவுரையாளர்கள் ஒழுங்காக வகுப்புகளுக்கு வராமையால், திரும்பிசெல்லவேண்டியுள்ளது என்றும் எனவே இக்குறையை உடன் போக்குமாறும் தலைமைப்பீடத்தை மாணவர் தலைவர் திரு. எஸ். சத்தியமூர்த்தி மகஜர் மூலம் கோரியுள்ளார். (கெ-உ)

## வேலணையில் மிளகாய் கொள்முதல்

வேலணை, வெள்ளி,

வேலணையில் புதிதாகத் திறந்துவைத்துள்ள விற்பனைத் திணைக்களத்தின் கிளையில் பெருமளவில் மிளகாய் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது.

## ஐ. தே. கட்சி அமைப்பாளர்கள்

யாழ்ப்பாணம், சனி

ஐக்கியதேசியக் கட்சியின் வடபகுதி அமைப்பாளர்களாகப் பின்வருவோர் உள்ளனர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா: திரு. ரி. புலேந்திரன், மன்னார்: திரு. எஸ். ஏ. ரஹீம், கிளிநொச்சி: திரு. என். கனகசூரியர், சாவகச்சேரி: எம். எஸ். சி. செல்வரத்தினம், யாழ்ப்பாணம்: திரு. பொ. கனகசபாபதி, நல்லூர்: திரு. ரி. மனோகரன், கோப்பாய்: திரு. இ. கதிர்காமத்தம்பி (மாவட்டச் செயலாளர்), உடுப்பிட்டி: திரு. பி. கனகராஜா, பருத்தித்துறை: திரு. எஸ். கே. வி. சரவணபவானந்தன், காங்கேசன்துறை: திரு. எஸ். கே. என். சிவராஜா, மானிப்பாய்: திரு. எஸ். அலோசியஸ், வட்டுக்கோட்டை: திரு. என். ரத்தினசிங்கம், ஊர்காவற்றுறை: திரு. சி. நல்லையா.

இவர்களது நியமனங்கள் ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. 25-ம் திகதி கண்டி போகம்பரா மைதானத்தில் நடைபெறும் ஐக்கியதேசியக் கட்சி அமைப்பாளர்கள் மகாநாட்டில் கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உத்தியோகபூர்வமாக வேட்பாளர் பட்டியலை வெளியிடுவார். அதன் பின் நடைபெறும் பொதுக்கூட்டமே ஐக்கிய தேசியக்கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டமாக அமையும் என்று வடபகுதி மாவட்ட இணைப்புச்செயலாளரும், கோப்பாய்த் தொகுதி அமைப்பாளருமான திரு. இ. கதிர்காமத்தம்பி நமது நிருபரிடம் தெரிவித்தார். (கா)

## பாலஸ்தாபன விழா

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சியை அடுத்துள்ள தர்மபுரம் ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய பாலஸ்தாபன விழாவும் திருப்பணி வேலைகளும் இம்மாதம் 23ம் திகதி காலை நடைபெறவுள்ளது.

இதைத்தொடர்ந்து ஆவணி மாதமட்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது.

இவ்வாலயத் திருப்பணி வேலைகளுக்கு அடியார்களை உதவும்படி தேவஸ்தான சபையினர் கேட்டுக்கொள்கின்றனர். (அ)

# நாடகம் பார்த்துக்கொண்டிருக்க வீட்டில் திருட்டு நடந்தது

யாழ்ப்பாணம்’ சனி

பூட்டப்பட்ட வீடொன்றில் இருந்து பல புடவைகள் திருட்டுப்போன சம்பவம் ஒன்று கல்வியங்காட்டில் இடம்பெற்றுள்ளது.

கல்வியங்காடு பகுதியில் சனசமூகநிலையமொன்றில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஆண்டுவிழாவில் இடம்பெற்ற நாடகங்களைப் பார்வையிடுவதற்கு திருட்டுப்போன வீட்டுச்சொந்தக்காரர் சென்றனர். இதனை அறிந்த திருட்டுப்பேர்வழிகள் பூட்டப்பட்ட வீட்டினுள் புகுந்து அங்கிருந்த பல பெறுமதிவாய்ந்த சேலைகளைத் திருடிச்சென்றுள்ளனர். கோப்பாய்ப் பொலிசார் இதுபற்றி விசாரணைசெய்துவருகின்றனர். (கா-அ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

ரம்புக்கனையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 615-வது தேசியசுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு;

**முதலாவது பரிசு**
**45 W 0739**
**ரூபா 1,00,000**

**இரண்டாவது பரிசு**
**39 E 0020**
**ரூபா 40,000**

**மூன்றுவது பரிசு**
**49 V 0064**
**ரூபா 10,000**

ஆறுதல்பரிசாக ரூபா 1000/- பெறும் நூறு டிக்கெட்டுகள் வருமாறு!-

| | |
|---|---|
| 15 A 0440 | 15 A 0469 |
| 23 A 0321 | 36 A 0071 |
| 37 A 0939 | 33 B 0944 |
| 11 C 0101 | 19 C 0163 |
| 38 C 0610 | 41 C 0631 |
| 42 C 0870 | 43 C 0046 |
| 19 D 0308 | 45 D 0431 |
| 05 E 0449 | 21 E 0016 |
| 19 [illegible] 0785 | 39 [illegible] 0606 |
| 04 F 0530 | 34 F 0594 |
| 06 G 0119 | 10 G 0679 |
| 22 G 0110 | 29 G 0076 |
| 29 G 0536 | 36 G 0201 |
| 44 G 0271 | 08 H 0764 |
| 26 H 0266 | 33 H 0573 |
| 35 H 0304 | 23 J 0949 |
| 38 J 0440 | 38 J 0764 |
| 43 J 0952 | 50 J 0422 |
| 11 K 0084 | 32 K 0498 |
| 47 K 0215 | 49 K 0854 |
| 19 L 0715 | 24 L 0680 |
| 25 L 0735 | 26 L 0883 |
| 02 M 0014 | 04 M 0180 |
| 05 M 0607 | 21 M 0370 |
| 45 M 0165 | 19 N 0462 |
| 22 N 0945 | 30 N 0641 |
| 35 N 0345 | 35 N 0630 |
| 37 N 0999 | 47 N 0475 |
| 02 O 0102 | 12 O 0045 |
| 21 O 0120 | 45 O 0636 |
| 22 P 0819 | 29 P 0797 |
| 41 P 0689 | 06 Q 0897 |
| 18 Q 0955 | 27 Q 0455 |
| 40 Q 0845 | 48 Q 0671 |
| 25 R 0950 | 36 R 0448 |
| 44 R 0859 | 45 R 0899 |
| 50 R 0542 | 01 S 0552 |
| 03 S 0209 | 21 S 0655 |
| 32 S 0061 | 01 T 0254 |
| 25 T 0301 | 41 T 0466 |
| 24 U 0202 | 25 U 0474 |
| 33 U 0550 | 12 V 0941 |
| 26 V 0070 | 31 V 0973 |
| 29 W 0306 | 37 W 0913 |
| 38 W 0584 | 50 W 1000 |
| 02 X 0146 | 13 X 0772 |
| 31 X 0410 | 31 X 0486 |
| 50 X 0142 | 50 X 0523 |
| 04 Y 0415 | 27 Y 0584 |
| 48 Y 0255 | 04 Z 0336 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

## எம். ஜி. ஆர்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள 30 தொகுதிகளில் 224 வேட்பாளர் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன காங்கிரஸ் ஜனதா தி. மு. க., அ. இ. அ. தி. மு. க. பாரத கம்யூனிஸ்ட் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளுள் சுயேச்சைகள் 28 பேரும் இங்கு போட்டியிடுகின்றனர். போட்டியிடுவோரில் ஐவர் பெண்கள். (உ-இ)

## யாழ். தொழில் திணைக்கள அதிகாரிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த வெசாக் தினத்தையொட்டிய வர்த்தக விடுமுறை நாட்களில் சாப்புச்சட்டத்தை மீறிக் கடைகளைத் திறந்து வியாபாரம் நடத்திய சில கடைக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத் தொழில் உதவி ஆணையாளரும் மற்றும் அதிகாரிகளும் இக்கடைகள் மீது திடீர் வேட்டை நடத்தினர்.

இத்திடீர் வேட்டையைத் தாமே நடத்தியதாகவும், கொழும்பிலிருந்து வந்த எவரும் கலந்துகொள்ளவில்லை என்றும் யாழ். தொழில் திணைக்களத்தில் தெரிவித்தனர். (அ)

## நாவலர் ச.ச.நிலையம்

யாழ்ப்பாணம், சனி

சுதுமலை நாவலர் சனசமூக நிலையத்தின் ஆறுவது ஆண்டுக்கூட்டம் திரு. சு. யோகநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவாயினர்.

தலைவர்: திரு. ஆ. பாலசுப்பிரமணியம் துணைத்தலைவர்; திரு. சி. திருஞானசம்பந்தன், செயலாளர்: திரு. சோ. சிவரர்சா, துணைச்செயலாளர்: திரு. வே. குணராசா, பொருளாளர்: திரு. அ. சிவதாசன். ஏழுபேர்கள் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (அ)

## பயிற்சி வகுப்புகள்

வேலணை, வெள்ளி

யாழ் மாவட்டத்திலுள்ள 40 கிராமசேவையாளர்களுக்கு அச்சுவேலியில் உள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் கடந்தவாரம் நான்கு நாட்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன: பல அரசாங்க இலகாக்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இவர்களுக்கு விரிவுரைகள் நடாத்தினார்கள்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா இப்பயிற்சி வகுப்புகளை தொடக்கி வைத்தார். (இ)

## பிணையில் விடுதலை

நெல்லியடி, வெள்ளி.

பல குற்றச் செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வாலிபர் இரண்டாயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். ஞானலிங்கம் என்ற இவ்வாலிபர் பல குற்றச் செயல்கள் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார். பருத்தித்துறை நீதவான் அ. கங்காதரன் முன்னிலையில் இவ்வாலிபர் ஆஜர் செய்யப்பட்டபோது இப்பிணை உததரவை நீதவான் வழங்கினார்.

இதயம் கனியாகும்
109 வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
விரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna)
GRAND RELEASE
Daily 10-30, 4-45 7-15 & 9.45
CARRY ON DICK
எல்லா நோய்களுக்கும் சிரிப்பு ஒரு அருமருந்து என்பர். சிரிப்பதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் நிறைந்த படம். குடும்பத்துடன் பார்த்துச் சிரித்து மெய்மறந்து அனுபவியுங்கள்.

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகின்றோம்)

ஸ்ரீதர் ஃ சிவாஜி ஃ தேவிகா
(யாழ்ப்பாணம்) ஃ நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
அன்னை இல்லம்

REGAL (JAFFNA)
Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
2ND CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார் — லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)


# தமிழ்—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கல் வீடு கட்டுகிறார்; பெண்களின் கையில் கழுத்தில் பொன் நகைகள் மின்னுகின்றன.

அலைகடலல், குளிரிலுங் காற்றிலும் பனியிலும் வெய்யிலிலும் அல்லறும் மீனவரின் இன்பவாழ்வுஇத்துடன் அஸ்தமிக்கவேண்டுமா?

எங்கள் காய் கனிகளையும், ஏற்றுமதி செய்யும் மீனையும் கருவாட்டையும், இனி நாங்களும் இங்கே வந்தவர்களுஞ் சேர்ந்து விழுங்கித் தள்ளுவோம், வேறுவழி இல்லை!

## இருண்ட வாழ்வு

நாங்கள் சாப்பிட்டால் மட்டும் போதாது; உடைவேண்டும்; விடுகட்ட வேண்டும்; நடக்க நல்ல பாதைபோட வேண்டும்; வாகனங்கள்வாங்க வேண்டும்; பெற்றேல் மண்ணெண்ணெய் . மின்சாரம் வேண்டும; தைக்க அச்சடிக்க, நீர் இறைக்க, யந்திரசாதனங்கள்வேண்டும்;

இவைகளையெல்லாம் பெறுவது எப்படி? மந்திரத்தால் மாங்காய் விழுமா? அல்லது அமெரிக்கா அள்ளி அள்ளித் தருமா?... அதெல்லாம் நடக்காது! ஆயிரம் வருடங்களுக்கு முந்திய நிலைக்குத் திரும்பிப் போகவேண்டும்! மணல்பாதையில், மாட்டுவண்டியில், இலுப்பெண்ணெய் விளக்கில் வாழத் தொடங்குவோம்!

## இவ்வளவும் கண்ட உண்மை

தனித்தமிழ்நாட்டை, முஸ்லீம்கள் விரும்பவில்லை; சமாதானவழிகளில் பெறமுடியாது போரிட்டுத்தான் பெறவேண்டும்; அதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவிவேண்டும்; அந்த உதவி பெற்ருல், நாங்களும் நாடுகள் பலவும் அமெரிக்காவால் ஆட்டிப் படைக்கப்படுவோம்; வெளியேவாழும் தமிழர்களால் ஆயிரம் ஆயிரம் பிரச்னைகள் உருவாகும். அதனுல் தமிழினமே ஆட்டம் காணும்!

## காண முடியாத கனவு!

ஆதலால் தமிழ் ஈழம் என்பது ஒரு பகற் கனவு! வெறும் கானல்நீர்!

போக முடியாத பாதைக்கு வழிகாட்டுபவர்களை அகற்றி புதிய தலைமையை உருவாக்குவோம்! புதுப்பாதை காண்போம்!


நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன் - மஞ்சுளா
புதுவெள்ளம

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-00
Sink or Swim

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்
கே. ஆர். விஜயா
கஸ்தூரி விஜயம்


## பலேஆசாமி

நெல்லியடி, வெள்ளி.

வல்வெட்டித் துறையில் நடைபெற்ற திருட்டுச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட வாலிபர் ஒருவர் நீதிமன்றத்தில் தான் பல திருட்டுக்களைச் செய்துகொண்டதாக ஒப்புக்கொண்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராமசாமி இராமகுரு என்ற இவ் வாலிபரை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் அ. கெங்காதரன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இவ் வுண்மைகள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் தண்டனை வழங்கும் திகதியை ஒத்திவைத்தார்

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் கடந்த 28வருடங்களாக தொலை [illegible] இயக்குநகராகக் [illegible] யாற்றி, மேற்பார்வையாளராக கொழும்பு மத்திய தந்தி அலுவலகத்திற்கு பதவியுயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள செல்வி அமுதா சின்னத்தம்பிக்கு பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

தபால் நிலைய பெண்கள் இளைப்பாறும் அறையில் தபாலதிபர் திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

திருவாளர்கள் எஸ். தில்லைநாதன், எஸ் சந்திரராஜா, ரி. குகதாஸ், பி கே. சுந்தரலிங்கம், எஸ். அருணகிரிநாதர், க. சுப்பிரமணியம், செல்வி எஸ். எம் உக்வத்தை, திருமதி சண்முகராஜா. ஆகியோர் செல்வி சின்னத்தம்பியின் தூய சேவையைப் பாராட்டிப் பேசினர்.

திருமதி சோமசுந்தரம் நன்றியுரை நிகழ்த்தினர். (உ)

## மௌனஞ்சலி

யாழ்ப்பாணம். சனி

யாழ்ப்பாணம் பீறிலியன்ட் விளையாட்டுக் கழக நிர்வாக சபைக் கூட்டத்தில் மறைந்த தலைவர் செல்வநாயகத்தின் மறைவுக்கு இறுதிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

கழகத்தலைவர் திரு. சிவஞானரஞ்சன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது

## பரீட்சை முடிவு ஜூலையில்

யாழ்ப்பாணம், சனி

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்) பரீட்சை முடிவுகள், ஜூலைமாதத்தில் வெளிவருமென, கல்வி உதவி அதிபரும், பரீட்சை ஆணையாளருமான திரு பி. வி. இரத்நாயக்கா தெரிவித்தார் இப் பரீட்சையில் 68,000 பரீட்சாத்திகள் தோற்றினரென்பது குறிப்பிடத்தக்கது. [செ]

## கிராமசேவையாளர்கள்

வேலணை, வெள்ளி

யாழ்மாவட்டத்திலுள்ள பதினொரு தேர்தல் தொகுதிகளிலும் 12கிராமசேவையாளர்கள் சேவையில் அமர்த்தப்படுவார்கள் என்றும் கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் மட்டும் இரண்டு கிராமசேவையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

## விவசாய ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி

ஊர்காவற்றுறைத் தொகுதியில் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களால் விவசாய ஆலோசனை பின்வரும் தினங்களில் வழங்கப்படவிருக்கின்றது.

நயினாதீவுதெற்கு திங்கட்கிழமைகள் நயினாதீவு வடக்கு செவ்வாய்க்கிழமைகள் புங்குடுதீவுமேற்கு புதன்கிழமை புங்குடுதீவு கிழக்கு வியாழக்கிழமைகள் கமத்தொழில் சேவை நிலையத்தில் வெள்ளிக்கிழமைகளிலும் ஆலோசனை பெற முடியும்? (கெ-உ)

## விரைவில் நியமனம்

யாழ்ப்பாணம், சனி

வடபிரதேச சுகாதார அத்தியட்சகர் பிரிவின் தொழிற்திணைக்களத்தின் மூலம் ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் 40 பேர் தெரிவாகியுள்ளார்கள், இவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும். (கெ. உ)

## மின்சார விநியோகம்

நெல்லியடி, வெள்ளி

தென் புலோலியில் உள்ள [illegible] ஆகிய கிராமங்களுக்கும், அல்வாய் தெற்கில் உள்ள தெருமூடிமடம், வெள்ளுருவை ஆகிய கிராமங்களுக்கும் மிக விரைவில் மின் விஸ்தரிப்பு மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்த மின் விஸ்தரிப்புத்திட்டத்தினை அமுல் செய்வதற்கு இலங்கை மின்சார சபை சம்மதம் தெரிவித்ததையடுத்து இக்கிராம மக்களின் ஒத்துழைப்புடன், இக்கிராமங்களில் மின்விஸ்தரிப்பு நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

## பண்டிதர் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் தமிழர்விடுதலைக்கூட்டணி அலுவலகத்திற்கு முன் தமக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் நடந்த ஆர்ப்பாட்டம் குறித்து பண்டிதர் திரு. கா. பொ. இரத்னம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று தெரிவித்துள்ளார். தமக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் சுதந்திரக்கட்சியையும் சுயாட்சிக்கழகத்தையும் சேர்ந்தவர்களே என்று பண்டிதர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்தியவர் சுயாட்சிக்கழகத்தைச் சேர்ந்தவர் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் ஊர்காவற்றுறை மத்திய கிளை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி செயலதிபர் நாயகத்துக்கு அனுப்பிவைத்துள்ளது என்று பண்டிதர் தெரிவித்துள்ளார்.

## நாளை சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

அரியாலைநீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்திவிநாயகர் கோவில் சகஸ்ர மகாசங்காபிஷேகம் நாளைக்காலை நடைபெறவிருக்கிறது. (கெ-அ)


தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 3. வது வாரம்
வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்! இது ஞானவேல்! யாவும் நிறைந்த தங்கவேல்! வருக! வருக! நீ மயிலேறி வருக!
தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ்நகர்)
திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணாத கண்ணென்ன கண்ணோ
ஏ. வி. எம். ராஜன் இருபானந்தவாரியார், நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஈழநாடு
EELANADU

# வட்டு. தொகுதியில் தியாகர் நல்லூரில் அருளம்பலம்

## 98 சு. க. வேட்பாளர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் கிளிநொச்சியில் செ. குமாரசூரியர், வட்டுக்கோட்டையில் ஏ. தியாகராஜா, நல்லூரில் எஸ். அருளம்பலம், மட்டக்களப்பில் ராஜன் செல்வநாயகம், டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் நியமனக்குழு இன்று 98வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்தது.

அவர்களில் முக்கிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் வருமாறு:

அத்தனகலை- திருமதி பண்டாரநாயக்கா, தொம்பே- பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மாரகம- ஸ்டான்லி திலகரத்தின, கல்முனை- எம். எல். ஏ. காரியப்பர், பொத்துவில் - எம். எம். முஸ்தபா, என். தர்மலிங்கம், காங்கேசன்துறை- முருகையா, பட்டிருப்பு- தம்பிராஜா, நுவரெலியா மஸ்கெலியா அனுரா பண்டாரநாயக்கா. [ம-இ]

# "தமிழன் தன்மானத்துடன் வாழ எம்மை நாமே ஆளவேண்டும்"

## — அமிர்தலிங்கம்

சங்கானை, வெள்ளி

'எம்மை நாம் ஆளவேண்டும் அப்பொழுதுதான் தமிழர்கள் தன்மானத்துடன் வாழமுடியும் என்று தந்தை செல்வா கூறி எம்மை வழிநடத்தினர். இந்த இலட்சியத்தையடைய நாம் எல்லாம் அவர் காட்டிய வழியைப் பின்பற்றினுல்தான் அவர் ஆத்மா சாந்தியடையும்'.

இவ்வாறு தமிழர்கூட்டணி செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் சங்கரத்தை முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்ற தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

செல்வன் இ. முருகானந்தன் தலைமையில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: அண்மையில் மறைந்த எம் தலைவர்களின் நினைவையொட்டி நடாத்தும் அஞ்சலிகள், பெயர்மட்டிலும் இல்லாமல் அவர்கள் விட்டுச்சென்ற இலட்சியக் கொள்கைகளைத் தொடர்ந்து நடாத்தி அந்த இலக்கை அடைவதே நாம் அவர்களுக்கும் எமது இனத்திற்கும் செய்யும் கைம்மாறாகும்.

'எம்மைப் பொறுக்கமட்டில் தேர்தல் பெரிதல்ல; இயக்கம் தான் பெரிது. இந்த இயக்கத்தின் முடிவுகளை நாம் ஏற்று அதன்படி நடப்பதே எமது இலட்சிய வெற்றிக்கு அடிகோலும். இந்த நோக்கில் தான் தமிழர் விடுதலைக்கூட்டணி என்னைக் காங்கேசன் துறைத் தொகுதியிலும், திரு. திருநாவுக்கரசுவை வட்டுத் தொகுதிக்கும் நிறுத்தியுள்ளதேயல்லாமல் ஓர் தனிமனிதன் அபிலாசைகளுக்கு மட்டும் அல்ல' என்று கூறினர்.

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் உரையாற்றுகையில், "ஒரு தேசிய இனம் தனது சுய நிர்ணய உரிமைகளைக் காப்பதற்கு போராடுவது தவறல்ல. இந் நோக்கிலே எம்மைச் சார்ந்த கட்சி நாட்டில் உள்ள ஏனைய சிங்கள சமூகத்தவரையும் ஒன்றிணைத்து எமக்கு விடிவு தேடிக்கொள்வதற்கு என்னுல் ஆன முயற்சியை மேற்கொண்டுள்ளேன். இதில் வெற்றியீட்டுவோம் என்பது திடநம்பிக்கை" என்று கூறினர்.

செக்கோசிலவாக்கியாவில் செக், சிலோவாக் என்னும் இரு இனங்கள் ஒரே அணியின் கீழ் சோஷசலிச அமைப்பில் ஆட்சி நடாத்த முடியுமானுல் நாம் ஏன் அந்த அடிப்படையில் நம்மை நாமே ஆளமுடியாது? சோவியத் ருசியாவில் நூற்றிருபது தேசிய இனங்கள் பதினைந்து குடியரசுகளாக இயங்க முடியுமானுல் எமது நாட்டிலும் அந்நியர் ஆட்சியிலும் அமைப்பை அகற்றிபழைய முறையாகிய இராஜரட்டை, மாயரட்டை, உடரட்டை; பாதரட்டை போன்ற அமைப்பை மேற்கொண்டு தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமைகளுடன் ஏன் சுபீட்சமாக வாழமுடியாது' என்று வி. பொன்னம்பலம் கேட்டார்.

"இதுபோன்ற முறைகள் கிடைக்காதபட்சத்தில் தனிநாட்டுக் கொள்கைக்கும் நான் ஆதரவளிப்பதில் வியப்பில்லை. என்னைச்சார்ந்த அணியும் உலக அரங்கில் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது எனவே எமது சுயநிர்ணய உரிமைக்காக உலக அரங்கில் குரல் கொடுக்கும் சக்தியாக நின்று உதவி புரியும் என்பது எனது திடநம்பிக்கை" என்றும்அவர் கூறினர்.

வட்டுக்கோட்டைத்தொகுதி வேட்பாளர் திரு. திருநாவுக்கரசு, "தந்தை செல்வாவின் வழி நின்று தமிழ்பேசும் மக்களின் விடிவுக்குக் குரல் கொடுத்து, ஒன்றுபட்டு உழைத்து அன்னரின் இலட்சியப் பாதை அடைய முயற்சி எடுப்போம்" என்ருர்.

கூட்ட ஆரம்பத்தில் அமரர் செல்வாவின் படம் திரைநீக்கஞ்செய்யபபட்டு இரண்டு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் பலர் உரையாற்றினர்.

# "இராசலிங்கத்தை போட்டியின்றி அனுப்புக"

அரியாலை, வெள்ளி

தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் நியமனக் குழுவினர் சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதி' ஒருவர் தெரிவு செய்யப்படக்கூடியதாக, உடுப்பிட்டித் தொகுதியை ஒதுக்கியமைக்கும், திருவாளர்கள் ஜெயக்கொடி, எம். சிவசிதம்பரம் ஆகியோர் திரு. திரு. இராஜலிங்கத்தின் வெற்றிக்காக உழைக்க முன்வந்திருப்பதையும் பாராட்டித் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களுக்கு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபைப் பொதுச் செயலாளர் திரு. எஸ். தில்லைநாதன் செய்தி அனுப்பியுள்ளார்.

திரு. இராசலிங்கம் உடுப்பிட்டியில் பெறும் வெற்றி தமிழர் விடுதலையின் மூலவேராக அமையுமென்றும் தமிழர் 'சமுதாயத்தின் ஒற்றுமையைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாது சாதிப் பிரச்னையைத் தமிழர் வேரோடு அறுப்பதற்கு முன்வந்துள்ளார்கள் என்பதை நாடறியச் செய்யவேண்டியது தமிழர்களின் கடமையாகுமென்றும் உடுப்பிட்டித் தொகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழர்கள் ஒன்றுபட்டு தமது வாக்குகளை இவருக்கு அளிக்கவேண்டுமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும், இளைஞர் பேரவையினரும், உடுப்பிட்டித் தொகுதி வாக்காளப் பெருமக்களும் அந்தரங்க சுத்தியோடு கடமையாற்றவேண்டுமென்றும், பெருமுயற்சி செய்து திரு. இராஜலிங்கத்தை இத்தொகுதியிலிருந்து போட்டியில்லாமல் தெரிவு செய்ய சகல இன மக்களும் முன்வரவேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இன்று அவசரகூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரிமாணவர்களின் எதிர்காலம்பற்றியும் தற்போது கல்லூரியில் நடைபெற்றுவரும் பிரச்னைகளுக்கு முடிவை ஏற்படுத்தும் நோக்குடனும் பெற்ருேர்- பாதுகாவலரடங்கிய கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சனசபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

......

## புதிய

(1-பக்கத் தொடர்ச்சி)

யில் அமைக்கப்பட்டது. 'தமிழ் சோஷலிஸ கூட்டாட்சிக்கட்சி' என்ற பெயரினையுடைய இக்கட்சி அமைப்புக் கூட்டத்தில் வித்துவான் க. ந. வேலனை மானிப்பாய்த்தொகுதியில் ஒரு வேட்பாளராக நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதுடன் வேறு தொகுதிகளிலும் கட்சிசார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (அ)

# வற்றுப்பளை பொங்கல்:

## 24 மணிநேர பஸ் சேவை

முல்லைத்தீவு, வெள்ளி

இம்மாதம் 30-ம் திகதி நடைபெற இருக்கும் முல்லைத்தீவு வற்றுப்பளை அம்மன் பொங்கல் திருநாளில் பங்குபற்ற வரும் அம்பாள் அடியார்களின் பிரயாண வசதியை முன்னிட்டு வழமைபோல் மேலதிக பஸ் சேவை 29, 30, 31-ந் திகதிகளில் 24 மணி நேரமும் சகல இடங்களுக்கும் செயலாற்றப்படும் என்று இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. வே. ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார்.

சென்ற வருடங்களிலும் பார்க்க அதிகமான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் வழமையிலும் பார்க்க அதிகமான பஸ்கள் சேவையில் ஈடுபத்தப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்தும் அவ்வவ்சாலைகள் மூலமும் விசேஷ சேவைகள் நடாத்தப்படவிருப்பதாகவும் சிறப்பாக முல்லைத்தீவுச்சாலையினுல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு சேவைகள் செயலாற்றப்படுமென்றும், மாங்குளம்- வற்றுப்பளை புகையிரத இணைப்புச்சேவைக்கு விசேஷ பஸ் சேவை செயலாற்றப்படுமென்றும் திரு. ஸ்ரீஸ்கந்தராசா சொன்னுர்.

## இ. போ. ச. ஊழியர் தண்ணீர்ப் பந்தல்

வற்றுப்பளை அம்மன் பொங்கல் திருநாளை முன்னிட்டு இ. போ. ச. முல்லைத்தீவுச்சாலை ஊழியர்களால் 30, 31-ந்திகதிகளில் மேற்படி உற்சவத்திற்கு வரும் அம்பாள் அடியார்களுக்கு வழமைபோல் பகலில் குளிர்பானமும் இரவில் பால் கோப்பியும் வழங்குவர்

# காங்கேசனில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அனுப்பிய தந்தியில், "துறைமுக ஊழியர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் நேற்று முன்தினமிரவுபொலிசார்மேற்கொண்ட அட்டகாசத்தினுல் பதட்டமான ஒருநிலை காங்கேசன்துறைப்பகுதியில் உருவாகியுள்ளது. துறைமுகவேலைகளும் பாதிக்கப்படும்சூழ்நிலைஏற்பட்டுள்ளது. பொலிசாரின் தாக்குதல்களினுல் பொதுவீதிகளில் மக்கள் நடமாடவும் அஞ்சுகின்றனர். இப்பகுதியில் அமைதி நிலவ உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன்" என்று ஐ. ஜி. பி.யைக் கேட்டுள்ளார்.

# தமிழ் இளைஞர் பேரவையின் குடியரசு பகிஷ்கரிப்பு ஊர்வலம்!

யாழ்ப்பாணம், சனி

தமிழ் இளைஞர் பேரவையினரும், மகளிர் பேரவையினரும், இணைந்துநடாத்தும், குடியரசுதின பகிஷ்கரிப்பும் மலையகத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியான இளைஞன் லட்சுமணனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் கண்டன ஊர்வலமும், நாளை மாலை 4மணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

ஊர்வலம், பிரதானவீதிவழியாகசென்று, அரியாலை பொது மைதானத்தை அடையும். பின்னர் பொதுக்கூட்டமொன்று நடைபெறும் கூட்டத்தில் சட்டத்தரணி திரு. வெ. யோகேஸ்வரன், திரு. வ. ந. நவரத்தினம், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. ஏ. நடராஜா, திரு. நாகராசா, திரு. ஏ. விஸ்வநாதன், கூட்டணி செயல்அதிபர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேச அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் உட்பட பலஇளைஞர் பேரவை, மகளிர் பேரவையினரும் உரையாற்றுவார்கள். (செ-இ)

# வேலிக்குத்தீ!

யாழ்ப்பாணம், சனி

மயிலிட்டியிலுள்ள ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தை சேர்ந்தபுஷ்பராஜாவின் வீட்டு வேலியை இனந்தெரியாதவிலர் நேற்று தீயிட்டு கொளுத்தியுள்ளனர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்

## ஸ்ரீகாந்தா

காலஞ்சென்ற டாக்டர் வி. கே. பரமநாயகம், காலஞ்சென்ற ஏகம்பாவின் புதல்வனும், விமலாவின் அன்புக் கணவரும், மகிலா, குமரேசன், பிரமிளா மைதிலியின் தந்தையும், ரஞ்சன், நவரட்ணத்தின் மாமனுரும், திருமதிகள் அருந்ததி திருச்சிற்றம்பலம், இந்திராணி குமாரசாமி ஆகியோரது சகோதரருமான ஸ்ரீகாந்தா காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 21-5-77 பிற்பகல் 4 மணியளவில் அன்னரின் இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 10, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6250

# பொலிஸ்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொறுப்பேற்று சுன்னுகம் பொலிஸ்நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து சகலபொலிஸ் மரியாதைகளுடனும் பிற்பகல் காரைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. அனு செனிவிரத்னவும் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவனியா, அனுராதபுரம் ஆகிய இடங்களின் பொலிஸ் சுப்ரிண்டன்களும் பெர்லிசாருமாகசுமார் 1000க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

துக்க வைபவங்களுக்கென இசைக்கப்படும் 'மோனிங் பாட்டி' என்ற பொலிசாரின் பாண்ட் இசைக்குழுவும் ஊர்வலத்தில் கலந்துகொண்டது. (கா)

# வானெலிக் கருவிகள் கிணற்றிலிருந்து மீட்பு!

கொழும்பு, வெள்ளி

இலங்கைகடற்றெழில் கூட்டுஸ் தாபனத்துக்கென பிரிட்டனிலிருந்து வரவழைக்கப்பட்ட சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஏழு வானெலித் தொடர்புக் கருவிகளும் ஒரு கிணற்றிலிருந்து நேற்றுமீட்கப்பட்டன.

முகத்துவாரத்தினையடுத்த இக்மன்பிட்டி என்ற இடத்தில் உள்ள கிணறு ஒன்றுக்குள் சாக்குகளால் மூடப்பட்ட நிலையில் இந்தக்கருவிகள் ஏழும் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# இன்று

யாழ்ப்பாணம், சனி

தந்தை செல்வாவின் புனித அஸ்தி இன்று மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம்மாநகர சபைக்கு அண்மையில் உள்ள தந்தை செல்வா நினைவாலய சதுக்கத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மேமாதம் 21-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanaadu Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.